தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 28.11.2013

**நவ. 30-ல் தென்னை கருத்தரங்கம், கண்காட்சி**

அறந்தாங்கியில் மாநில அளவிலான தென்னைசார் பொருட்களின் உற்பத்தி கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சனிக்கிழமை (நவ. 30) நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் இ.எம். சுதர்சனநாச்சியப்பன் தொடக்கி வைக்கிறார்.

விழாவினை இந்திய தென்னை வளர்ச்சி வாரியம் மற்றும் அறந்தாங்கி தென்னை உற்பத்தியாளர்கள் நலச்சங்கம், புதுக்கோட்டை மாவட்ட தென்னை விவசாயிகள் கூட்டமைப்பு இணைந்து நடத்துகின்றனர். விழாவில் புதுக்கோட்டை மாவட்டத்தை இந்திய தென்னை வாரியத்தில் இணைக்க உள்ளனர்.

இதில், இந்திய தென்னை வளர்ச்சி வாரியத் துணைத் தலைவர் ஆர். கலைச்செல்வன், துணை இயக்குநர் ஹேமச்சந்திரன், கொச்சி தென்னை வளர்ச்சி வாரிய செயலாக்க பொறியாளர் தி. ஸ்ரீகுமார் பொதுவாள் மற்றும் மத்திய மாநில அலுவலர்களும், தென்னை விவசாயிகளும் கலந்து கொள்கிறார்கள்.

ஏற்பாடுகளை தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர்கள், மாவட்ட கூட்டமைப்பு மற்றும் அறந்தாங்கி நலச்சங்க நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.

**மானாவாரி நிலங்களில் நீர் சேமிக்க உதவும் பூசா ஹைட்ரோஜெல்**



மானாவாரி விவசாய நிலங்களில் மழை நீரைச் சேமித்து பயிர்களுக்குப் பயன்படுத்துவதற்கு, பூசா ஹைட்ரோஜெல் என்னும் வேளாண்மை வேதிப் பொருளை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சித் துறை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து, தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ. முத்தையா கூறியது:

பூசா ஹைட்ரோஜெல் என்னும் வேதிப் பொருள் பாலிமர் வகையைச் சேர்ந்தது. காய்ந்த நிலையில் இருக்கும் பூசா ஹைட்ரோஜெல் பழுப்பு நிறத்தில் உலர்ந்த சவ்வரிசி போல காணப்படும். இதன்மீது தண்ணீர் பட்டவுடன் தனது இயல்பான எடையை விட 400 மடங்கு எடையுள்ள நீரை உறிஞ்சி சேமித்து வைத்து, சிறிது சிறிதாக மண்ணில் வெளியேற்றும்.

பூசா ஹைட்ரோஜெல்லைப் பயன்படுத்தி, மானாவாரி நிலங்களில் மழை நீரை சேமித்து, நீண்ட நாள்களுக்கு பயிரின் வேரில் சிறிதுசிறிதாக தண்ணீர் கிடைக்கும் வகையில் செய்யலாம். பூசா ஹைட்ரோஜெல் தண்ணீரை மட்டுமின்றி, உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளையும் உறிஞ்சி சேமித்து வைத்து, சிறிது சிறிதாக வெளியேற்றுகிறது. இந்த வேளாண்மை வேதிப் பொருளை, இறவை பாசனப் பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

முக்கிய அம்சங்கள்: பூசா ஹைட்ரோஜெல் மண்ணில் நீர் சேமிப்பை அதிகரிக்கிறது. உப்பு மற்றும் கடினத் தன்மை உடைய தண்ணீரையும் அதிக அளவில் உறிஞ்சுகிறது. 40 முதல் 50 டிகிரி சென்டிகிரேட் வெப்பம் உள்ள பகுதியிலும் பயன்படுத்தலாம்.

மண்ணில் ஓராண்டு வரை நிலைத்திருக்கும். உரம் மற்றும் பயிர் பாதுகாப்பு மருந்துகளைச் சேமித்து வைத்து, நிலத்தில் வீணாவதைத் தடுக்கிறது. மண்ணில் விதை முளைப்பு மற்றும் பயிர் வளர்ச்சிக்கும், வேர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதிக பூ மற்றும் காய் உற்பத்திக்கும் உதவுகிறது.

பூசா ஹைட்ரோஜெல் தில்லியில் உள்ள வேளாண்மை வேதிப் பொருள் மற்றும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மூலம் தயாரித்து விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேர் நிலத்துக்கு 2.5 கிலோ எடையுள்ள பூசா ஹைட்ரோஜெல்லைப் பயன்படுத்தலாம்.

தற்போது, வேளாண்மைத் துறை சார்பில் மானாவாரி நிலங்களில் பூசா ஹைட்ரோஜெல்லைப் பயன்படுத்தி, பரிசோதனைத் திடல்கள் அமைக்கபட உள்ளன.

இதுகுறித்த விவரங்களை, விவசாயிகள் அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றார்.

**துவரை சாகுபடி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை**



ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி பகுதியைச் சார்ந்த விவசாயிகளுக்கு துவரை சாகுபடிக்கு குழித்தட்டு முறையில் நாற்றங்கால் அமைத்து பராமரிக்கும் தொழில்நுட்பம் குறித்து, வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கினர்.

தமிழகத்தில் பயறு சாகுபடி வகைகளில் உளுந்து, பாசிப்பயறு, தட்டைப் பயிறு, துவரை, கொண்டைக்கடலை ஆகியன முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இதில் உளுந்து, பாசிப்பயிறு போன்றவை குறைந்த நாள்களில் விளைச்சல் பெறுவதால், இதன் உற்பத்தித் திறன் குறைவாகவே உள்ளது. துவரைப் பயறு விளைச்சலுக்கு 105 முதல் 200 நாள்கள் வரை உள்ளதால், இதன் உற்பத்தித் திறன் அதிகமாகும். மேலும், உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகள் தொழில்நுட்ப நடவு முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறலாம்.

தொழில்நுட்பம் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ச. கண்ணையா கூறியது:

துவரை சாகுபடியில் நடவுமுறையைப் பின்பற்றுவதன் மூலம் போதிய பயிர் எண்ணிக்கையைப் பராமரிப்பதுடன், குறைந்த விதையளவுடன் 1 ஏக்கருக்கு 1 கிலோ விதை போதுமானது. தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்துவதால் இறவையில் 1 ஏக்கருக்கு 500 முதல் 600 கிலோவும், மானாவாரியில் 1 ஏக்கருக்கு 300 முதல் 400 கிலோ வரை கூடுதல் மகசூலும் கிடைக்கும்.

துவரை நடவு செய்வதற்குத் தேவையான நாற்றாங்காலை குழித்தட்டு மற்றும் பாலித்தீன் பைகளில் வளர்த்து நடவு செய்யலாம். பெருங்கரை போன்ற கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு இதுபோன்ற நாற்றாங்கால் அமைக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. குழித்தட்டு நாற்றங்கால் முறையில் 200 காஜ் கருப்பு நிற குழித்தட்டுகள் அமைத்து, அக் குழிகளில் மக்கிய தென்னை நார்க் கழிவுகள் மற்றும் மணல் பயன்படுத்தப்படுகிறது. தட்டில் உள்ள குழிகளில் தண்ணீர் தேங்கி வேர்கள் அழுகி விடாமல் இருந்திட 3 முதல் 4 துளைகள் போட வேண்டும். 15 நாள் வளர்ந்துள்ள நாற்றுகளை நடவு செய்திடலாம்.

இக் குழித் தட்டுகளில் 90 சதவீதம் பரப்பியுள்ள தென்னைநார் மற்றும் மணலில் குழி ஒன்றில் இரண்டு விதைகளை ஊன்ற வேண்டும். பூஞ்சாள நோய் தாக்குதலிலிருந்து நாற்றுகளைப் பாதுகாத்திட 1 கிலோ விதையுடன் 10 கிராம் சூடோமோனாஸ் கலவையுடன் கலந்து விதைக்க வேண்டும். முளைத்த 10ஆம் நாளில் வீரியமான நாற்றை மட்டும் வைத்துவிட்டு, வலுவிழந்த நாற்றினை நீக்கி, ஒரு குழியில் ஒரு நாற்று மட்டும் இருக்குமாறு வைத்து பின்னர் நடவு செய்ய வேண்டும்.

நடவு முறை: நடவு செய்வதற்கு 1 வாரத்திற்கு முன்பு தொழு உரம் இட்டு நடவு வயலைத் தயார் செய்திட வேண்டும். வரிசைக்கு வரிசை 5 அடி, செடிக்கு செடி 3 அடி இடைவெளியில் நாற்றுகள் நடுவதற்கு ஏதுவாக சிறு குழிகள் எடுக்க வேண்டும். 15 நாள்கள் வளர்ந்துள்ள நாற்றுகளை அந்த குழிகளில் நடவு செய்ய வேண்டும்.

ஊடுபயிர் சாகுபடி: வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளி உள்ளதால், காலியாக உள்ள பரப்பில் ஊடுபயிராக உளுந்து, பாசிப் பயறு மற்றும் கடலை போன்ற பயிர்களைப் பயிர் செய்யலாம். இதனால் கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம் பெறலாம்.

களை மற்றும் நீர் மேலாண்மை: நடவு செய்த 20-ஆம் நாளில் கைக் களை எடுத்து களைகளைக் கட்டுப்படுத்தலாம். தண்ணீர் தேங்கினாலும், பற்றாக்குறை ஏற்பட்டாலும் பயிரின் வளர்ச்சி பாதித்து, மகசூல் இழப்பு ஏற்படும். இதனால் நடவின்போதும், பூக்கள் மலரும்போதும், காய்கள் உருவாகும்போதும் தண்ணீர் பாய்ச்சுவது அவசியம்.

நடவு செய்த 30ஆம் நாள் ஓர் ஏக்கருக்கு டி.ஏ.பி. 50 கிலோ, பொட்டாஷ் 25 கிலோ இட வேண்டும். பூக்கும் தருணத்தில் 2 சதம் டி.ஏ.பி. கரைசலை இலை வழியாக 15 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். இதனால் அதிக எண்ணிக்கையில் காய்கள் உருவாகும்.

துவரையின் நுனி மேல் நோக்கி வளர்ந்து கொண்டே செல்லும். இதனைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பக்கக் கிளைகள் தோன்றி, அதிக காய்கள் உருவாகும்.

எனவே, நடவு செய்த 20 முதல் 30ஆம் நாள் ஒருமுறையும், 50ஆம் நாள் இரண்டாவது முறையும் நுனியைக் கிள்ளிவிடவது அவசியம்.

பயிர் பாதுகாப்பு முறைகள்: சரியான நேரத்தில் மண் அணைத்துக் கொடுக்க வேண்டும். பூச்சிகள் ஏதேனும் தென்பட்டால், வேப்பம் கொட்டை கரைசல், என்.பி.வி. கரைசல், புரோபினாபாஸ் போன்றவற்றை வேளாண் துறையினரின் ஆலோசனைப்படி தெளிக்க வேண்டும்.

1 ஏக்கர் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனத்துக்கு சிறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. பூச்சி மற்றும் பூஞ்சாள நோய் மருந்துகள் 50 சதம் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என அவர் தெரிவித்தார்.

## மாடுகளில் கர்ப்பப் பை வெளியே தள்ளுதலும் தடுப்பு முறைகளும்

கர்ப்பப் பை வெளித் தள்ளுதல் மாடுகள் சினையாக உள்ளபோது அல்லது கன்றுகள் ஈன்ற உடன் கருப்பையின் பின்பகுதியும், புணர் உறுப்பின் ஒருபகுதியும் சேர்ந்து சில சமயங்களில் வெளியே வந்துவிடுகின்றன. இதையே உறுப்பு தள்ளுதல் அல்லது அடித் தள்ளுதல் என்றும் கூறுவர்.

வெளித் தள்ளிய கர்ப்பப் பையில் மண், தூசி, சாணம் முதலியவை ஒட்டிக் கொள்ளும். இதனால், கிருமிகள் உள்சென்று இனப்பெருக்க உறுப்புகளைப் பாதித்து, குறைப் பிரசவத்தையோ அல்லது கருச் சிதைவையோ ஏற்படுத்திவிடும். ஈன்ற மாடுகளில் வெளித் தள்ளிய கர்ப்பப் பையில் நோய் தொற்று ஏற்பட்டால், கர்ப்பப் பையில் சீழ் பிடித்து, சினைப் பிடிப்பதிலும் பிரச்னை ஏற்பட்டு, தாற்காலிக மலட்டுத் தன்மை ஏற்படும்.

அதனால், கர்ப்பப் பை வெளித் தள்ளுதல் ஏற்பட்டால், உடனடியாக கால்நடை மருத்துவரை அணுகி, தகுந்த சிகிச்சை அளிக்கா விட்டால், மாடுகளின் கர்ப்பப் பையில் பாதிப்பு ஏற்பட்டு, தாற்காலிக அல்லது நிரந்தர மலட்டுத் தன்மையும், சில சமயங்களில் மாடுகளின் உயிருக்கே ஆபத்தும் ஏற்பட்டுவிடும்.

இதுகுறித்து, தேனி உழவர் பயிற்சி மைய பேராசிரியர்கள் இரா. உமாராணி, நா.ஸ்ரீ. பாலாஜி, அ. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

மாடுகள் வளர்ப்போர் கர்ப்பப் பை வெளியே தள்ளுதலைப் பற்றி நன்கு அறிந்து, தகுந்த தடுப்பு முறைகளையும் பராமரிப்பு முறைகளையும் கடைப்பிடிக்கும்போது, கர்ப்பப் பையை நன்கு பாதுகாப்பதன் மூலம், ஆண்டுக்கு ஒரு கன்று ஈனுவதற்கு வாய்ப்புள்ளது.

கர்ப்பப் பை வெளியே தள்ளுவதற்கான காரணங்கள்: ஒன்று அல்லது இரண்டு மாத கர்ப்ப காலத்தில் கர்ப்பப் பை வெளியே தள்ளுவதற்கு முக்கியக் காரணம், ஈஸ்ட்ரோஜன் என்ற கணநீர் சில மாடுகளில் அதிக அளவு சுரப்பதாகும். இதன் காரணமாக, இடுப்புச் சதைப் பகுதிகள் மற்றும் கர்ப்பப் பையின் பாகங்கள் தளரச் செய்கின்றன. இந்த தளர்ச்சியின் காரணமாக, முதலில் கர்ப்பப்பை வெளியே தெரிகிறது. இவ்வாறு வெளியே தள்ளப்பட்ட கர்ப்பப் பையின் வாயை நுண்ணுயிரிகள் தாக்குவதால், இந்த மென்மையான உறுப்புக்கு ஒருவித எரிச்சல் ஏற்படுகிறது.

இந்த எரிச்சலின் காரணமாக, மேலும் அதிகமாக கர்ப்பப் பை வெளியே தள்ளப்படுகிறது. கன்று ஈன்ற மாடுகளில் முதல் 2 அல்லது 3 நாள்களுக்குள் கர்ப்பப் பை வெளியே தள்ளுதல் ஏற்படும்.

கன்று ஈன்ற மாடுகளில் கர்ப்பப் பை வெளியே தள்ளும்போது, புணர் உறுப்போ அல்லது கர்ப்பப் பை முழுவதும் வெளித் தள்ளப்படும். கன்று ஈனுவதில் சிக்கல் ஏற்படும்போது, தாமாகவோ அல்லது பிறர் உதவி கொண்டு கன்றை வெளியே எடுக்க முயற்சி செய்தாலோ அல்லது கன்றை கயிறு கட்டி இழுத்தாலோ கர்ப்பப் பை வெளியே தள்ளுதல் ஏற்படும்.

நஞ்சுக் கொடியானது, கன்று ஈன்ற 4 மணி முதல் 8 மணி நேரத்துக்குள் வெளியே வந்துவிட வேண்டும். நீண்ட நேரம் நஞ்சுக்கொடி தங்குவதாலோ, கால்நடை மருத்துவர் இல்லாமல் தகுதியற்றவர் கொண்டு தவறான முறையில் நஞ்சுக் கொடியை வெளியே எடுப்பதாலோ, கர்ப்பப் பை வெளித் தள்ளுதல் உண்டாகும்.

அறிகுறிகள்: சினைப் பைகளில் கர்ப்பப் பையானது சிறிதளவோ அல்லது முழுமையாகவோ வெளி வருவதுண்டு. கன்று ஈன்ற மாடுகளில் கர்ப்பப் பை முழுவதுமே வெளித் தள்ளப்பட்டுவிடும். இவ்வாறு கர்ப்பப் பை வெளித் தள்ளுவதால் கர்ப்பப் பைக்கு ரத்த ஓட்டம் தடைபடுகிறது. கர்ப்பப் பையில் காயம் உண்டாகி இருந்தால், காயத்தால் ஏற்படும் எரிச்சலால், மாடுகள் முக்கிக் கொண்டே இருக்கும்.

பராமரிப்பு முறைகள்: மாட்டின் பின்புறமானது முன்புறத்தைவிட அரை அடி உயரமாக இருக்கும்படியான இடத்தில் கட்டிவைக்க வேண்டும். சிறிது சிறிதாக தீவனம் கொடுக்க வேண்டும். கர்ப்பப் பை சேதம் ஏற்படாதவாறு, பாதுகாக்க வேண்டும். ஒரு சுத்தமான ஈரத் துணி கொண்டு மூட வேண்டும். சுத்தமான தண்ணீரில் சிறிது உப்பு கலந்து, மூடிய துணி மீது ஈரம் குறையாதவாறு ஊற்ற வேண்டும். கன்று ஈன்ற நஞ்சுக் கொடி 8 மணி நேரத்துக்குள் விழாவிட்டால், உடனே கால்நடை மருத்துவரை நாட வேண்டும்.

மேலும் இதுகுறித்து விவரம் தெரிந்து கொள்வதற்கு, தேனி உழவர் பயிற்சி மையத்தில் 04546-260047 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

**மானாவாரி பருத்தி வயல்களில் வேளாண் அலுவலர்கள் ஆய்வு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியத்தில் பருத்தியில் ஏற்பட்டுள்ள நோய்கள் குறித்து வேளாண் அலுவலர்கள் செவ்வாய்க்கிழமை கள ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில், வேப்பந்தட்டை ஒன்றியம், வெண்பாவூர், காரியானூர், வெள்ளுவாடி, வேப்பந்தட்டை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் பயிரிடப்பட்டுள்ள மானாவாரி பருத்தி வயல்களில் ஆய்வு மேற்கொண்ட வேளாண்மை உதவி இயக்குநர் கீதா கூறியது:

கடந்த 2 வாரங்களுக்கு முன்பு நிலவிய தொடர் வறட்சி, அண்மையில் பெய்த மழை ஆகியவற்றின் காரணமாக பருத்தியில் நோய் தாக்குதல், உடற்செயலியல் மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளால் மகசூல் இழப்பு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டது.

குறிப்பாக, வெர்டிசிலியம் வாடல் நோயின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, காய்கள் முதிராமலேயே வெடித்து விடுகின்றன. இந்நோய் தாக்கிய செடிகளிலிருந்து புதிய தளிர்களும் காணப்படுகின்றன. இந்நோயை கட்டுப்படுத்த, நேடிவா (ட்ரைபுளோசிஸ்ரோபின் 10 டெபுகோனசோல்) என்ற பூஞ்சாணக் கொல்லி மருந்தை 1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில், இலை வழியாக செடிகள் நனைந்து வேர்பகுதிக்கு செல்லும்படி தெளித்து கட்டுப்படுத்தலாம். பிறகு, வளர்ச்சி ஊக்கியான பிளானோபிக்ஃஸ 10 லிட்டர் தண்ணீருக்கு 4.5 மில்லி என்ற அளவில் தெளித்து, செடியின் வளர்ச்சியை தூண்டி வளரச் செய்து மகசூல் பெறலாம்.

மேலும், நுண்ணூட்டச் சத்து குறைபாட்டால் உருவாகியுள்ள சிவப்பு இலையை கட்டுப்படுத்த, 10 லிட்டர் தண்ணீருக்கு மெக்னீசியம் சல்பேட் 100 கிராம், ஜிங்க் சல்பேட் 50 கிராம் ஆகியவற்றை 15 நாள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும். அல்லது, பருத்தி வயலில் ஈரப்பதம் இருக்கும் நேரத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பருத்தி ப்ளஃஸ, 1 ஏக்கருக்கு 2.5 கிலோ என்ற அளவில், இரண்டாகப் பிரித்து ஒவ்வொன்றையும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள் இடைவெளியில், 2 முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இந்த பருத்தி ப்ளசானது வேளாண்மை வட்டார உதவி இயக்குநர் அலுவலகங்களில் விவசாயிகளுக்கு மானிய விலையில் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் அல்லது வேப்பந்தட்டை வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு பாதிக்கப்பட்ட பருத்தி செடிகளுடன் சென்று உரிய ஆலோசனைகள் பெறலாம் என்றார்.

ஆய்வின்போது, வேளாண் அலுவலர் பிரேமா, வேளாண் அறிவியல் மைய பருத்தி திட்ட அலுவலர் சரவணன், வேளாண் உதவி அலுவலர் செப்ந்தரராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

**கோமாரி நோயால் கால்நடைகள் இறப்பு: நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

திருக்கோவிலூர் அருகே ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் கோமாரி நோயால் இறந்த கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேமுதிக கோரிக்கை விடுத்துள்ளது.

திருக்கோவிலூர் அடுத்துள்ள பகண்டை கூட்ரோட்டில் ரிஷிவந்தியம் ஒன்றிய தேமுதிக ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஒன்றியச் செயலர் டி.கே.கோவிந்தன் தலைமை வகித்தார். மாவட்டப் பொருளாளர் சி.சண்முகம் முன்னிலை வகித்தார். மாவட்ட தொழிற் சங்கச் செயலர் கே.அண்ணாதுரை வரவேற்றார்.

கூட்டத்தில் உளுந்தூர்பேட்டையில் நடைபெறவிருக்கும் தேமுதிக மாநில மாநாட்டில் ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் இருந்து சுமார் 25,000 பேர் பங்கேற்பதென முடிவு செய்யப்பட்டது.

மேலும், கோமாரி நோயால் இதுவரை இறந்த கால்நடைகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். ஒன்றியத்தின் பல பகுதிகளுக்கு கூடுதல் பேருந்துகளை இயக்க வேண்டும். ரிஷிவந்தியம், வாணாபுரம் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவம் பார்க்க வரும் மக்களை கவனிக்க மறுக்கும்

மருத்துவர்கள் மீதும், அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டு குறித்தும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா**

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் (மார்க்கெட் கமிட்டி) நெல் கொள்முதல் பணம் பெற முடியாததால் மனமுடைந்த விவசாயிகள், பூச்சி மருந்தை குடிக்க முயன்றும் மார்க்கெட் கமிட்டி கதவை அடைத்தும் செவ்வாய்க்கிழமை போராட்டம் நடத்தினர். இது குறித்து தினமணியில் புதன்கிழமை செய்தி வெளியானது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வடக்குபட்டு முனுசாமி, ராஜேந்திரன் ஆகியோருக்கு நெல்லுக்குண்டான தொகையை வியாபாரிகள் பட்டுவாடா செய்து அதற்கான தகவலை எழுதி அந்த கடிதத்தை ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளரிடம் புதன்கிழமை அளித்தனர்.

இதே போல் பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கும் நெல்லுக்குண்டான பாக்கித் தொகை சுமார் ரூ.20 லட்சத்தை வியாபாரிகள் விரைந்து பட்டுவாடா செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நாளை விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

கடலூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற உள்ளது. விவசாயிகள் தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாகத் தெரிவிக்கலாம்.

கூட்ட அரங்கில் கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 10.30 மணிக்கு முன்பு தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம். இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது எனச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கரும்புக்கு ஆதரவு விலை: ரூ.2,650-ஆக நிர்ணயம்**

கர்நாடகத்தில் கரும்புக்கு ஆதரவு விலையை டன்னுக்கு ரூ. 2,650- ஆக உயர்த்தப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

பெல்காமில் புதன்கிழமை விவசாயி விட்டல் அரபாவி தற்கொலை செய்து கொண்டதையடுத்து, சட்டப்பேரவையில் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் மீது அவர் பேசியது:

கரும்புக்கு ஆதரவு விலைய உயர்த்த வலியுறுத்தி, போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயி விட்டல் அரபாவி விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இது துரதிருஷ்டவசமானது.

பெல்காம் மாவட்டம், கங்கணவாடியைச் சேர்ந்த விவசாயி விட்டல் அரபாவிக்குச் சொந்தமான 2 ஏக்கர் 12 குன்டா நிலத்தில் பயிரிடப்பட்டிருந்த கரும்பு விவசாயத்தில் நஷ்டம் அடைந்த அவருக்கு, ரூ. 3 லட்சம் வரை கடன் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், பெல்காம் சட்டப்பேரவை கட்டடம் முன் கரும்பு விவசாயிகள் ஈடுபட்டிருந்த போராட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் விட்டல் அரபாவி விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவரது இறப்பிற்கு அரசு தனது வருத்தத்தையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.

அவரது குடும்பத்திற்கு அரசு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்க முடிவு செய்துள்ளது. மேலும், கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2,650 வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயியின் தற்கொலையை பாஜக அரசியலாக்கப் பார்க்கிறது. முந்தைய பாஜக ஆட்சியில் கர்நாடக மாநிலம், ஹாவேரியில் 2

விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டதை அந்தக் கட்சியினர் மறந்துவிட்டு அமளியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார் அவர்.

**"ஆவின்' பால் விற்பனையாளர்கள் தருமபுரி ஆட்சியரிடம் மனு**

ஆவின் பால் விற்பனையாளர்களிடம் கூடுதல் வைப்புத்தொகை வசூலிப்பதைக் கைவிடக் கோரி தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தனிடம் செவ்வாய்க்கிழமை மனு அளிக்கப்பட்டது.

மனு விவரம்: ஆவின் கூட்டுறவு பால் ஒன்றியத்தின் மூலம் பால் பெறப்பட்டு தருமபுரி மாவட்டத்தில் 99 முகவர்கள் நாளொன்றுக்கு 20 முதல் 50 லிட்டர் வரை பால் விற்பனை செய்து வருகின்றனர்.

இதற்காக ரூ. 2 ஆயிரம் வைப்புத் தொகை செலுத்தியுள்ளனர். இந்த நிலையில், ஆவின் நிர்வாகம் வைப்புத்தொகையை ரூ. 5 ஆயிரமாக உயர்த்தியுள்ளது.

மேலும், சில முகவர்களுக்கு பால் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே, கூடுதல் வைப்புத்தொகை வசூலிப்பதைக் கைவிட்டு, அனைத்து முகவர்களுக்கும் தொடர்ந்து பால் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் பால் விற்பனையாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் அளிப்பு**

நாமக்கல்லில் 110 விவசாயிகளுக்கு ரூ.1.05 கோடி மதிப்பிலான வேளாண் இயந்திரங்கள் புதன்கிழமை அளிக்கப்பட்டன.

வேளாண் பொறியியல் துறை சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார்.

தொடர்ந்து அவர் விவசாயிகளுக்கு இயந்திரங்கள், பல்வேறு வேளாண் கருவிகளையும் வழங்கினார்.

குறிப்பாக கொழு கலப்பை 45 பேருக்கும், சுழல்கழப்பை 14 பேருக்கும், பேட்டரி ஸ்பிரேயர் 6 பேருக்கும், பவர் பிரேயர் இருவருக்கும், கை ஸ்பிரேயர் 8 பேருக்கும், தீவன புல்வெட்டும் கருவி 5 பேருக்கும், பவர் டில்லர் 8 பேருக்கும், விசை

களையெடுக்கும் கருவி 7 பேருக்கும், நெல் அறுவடை இயந்திரம் ஒருவருக்கும், வைக்கோல் கட்டு கட்டும் கருவி ஒருவருக்கும், பல்வகை பயிர் கதிரடிக்கும் கருவி ஒருவருக்கும் என மொத்தம் 110 பேருக்கு ரூ.1.05 கோடி செலவில் வேளாண் கருவிகள் வழங்கப்பட்டன.

இதில் விவசாயிகளின் பங்குத்தொகை 69.52 லட்சம் என்றும், மீதம் ரூ.36.05 லட்சம் அரசு மானியம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசு மானியத்துடன் வழங்கப்படும் வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இளையப்பன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்.

**கோமாரியால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

நாமக்கல்லில் கோமாரி நோயால் இறந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமையில் நாமக்கல்லில் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில், பரவலாக மாவட்டம் முழுவதும் கோமாரி நோய் தாக்குதலால் கால்நடைகள் உயிரிழந்து வருகிறது.

தடுப்பு நடவடிக்கைளை தீவிரப்படுத்துவதுடன், இறந்த கால்நடைகளுக்கு நிவாரணம் வழங்கிடவும் வேண்டும். நீர் நிலைகள், சாலை ஆக்கிரமிப்புகளை உடனுக்குடன் அகற்றவும், கூட்டுறவு நிறுவனங்களில் தட்டுப்பாடின்றி உரம் விநியோகம் செய்யவும், பசும் பாலுக்கு லிட்டருக்கு ரூ.5-ம், எருமை பால் லிட்டருக்கு ரூ.7-ம் கொள்முதல் விலையை உயர்த்திடவும் வேண்டும். விவசாயிகளுக்கு வங்கிக் கடன், பயிர்க் கடன் விரைவில் கிடைக்கச் செய்யவும் வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் விடுத்தனர்.

அதற்கு ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி பதிலளித்து பேசியது: சாலை, நீர் நிலைகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றிட உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கோமாரி நோய் கால்நடைகளை தாக்கும் நிலை அறிந்தவுடன் மாவட்ட நிர்வாகம், கால்நடை பராமரிப்புத் துறை இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன. குறிப்பாக, மாவட்டத்திலுள்ள கால்நடைச் சந்தைகளுக்கு தாற்காலிகத் தடை, போர்க்கால அடிப்படையில் கோமாரி நோய் தாக்கியப் பகுதியில் உள்ள கால்நடைகளை காப்பாற்றும் வகையில் மருத்துவக் குழுக்களைக் கொண்டு தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மற்ற துறைகளும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால் கோமாரி நோய் தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் கூட்டுறவுத் துறை மூலம் தங்கு தடையின்றி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வோளாண்மைத் துறையின் நவீன தொழில் நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ள விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பட்டா மாறுதலை பொருத்தவரை நாமக்கல் மாவட்டத்திலுள்ள 5 வட்டங்களிலும் சிறப்பு பட்டா மாறுதல் முகாம் நடத்தப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

விரைவில் தகுதியான அனைத்து விணணப்பங்களுக்கும் பட்டா மாறுதல் உத்தரவு அளிக்கப்படும் என்றர் அவர்.

இந்தக் கூட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து 69 மனுக்கள் பெறப்பட்டன.

அவற்றின் மீது விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு+ துறை அலுவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கூட்டுறவு இணைப் பதிவாளர் சிவமுத்துக்குமாரசாமி, மத்திய திட்ட துணை இயக்குநர் லோகநாதபிரகாசம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்**

காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் அட்மா திட்டத்தின் கீழ் வட்டார விவசாயிகளின் ஆலோசனைக் கூட்டம், வட்டாரத் தொழில்நுட்பக் குழுக் கூட்டம் வேளாண்மை விரிவாக்க மைய அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வேளாண்மை உதவி இயக்குநர் அ.நாசர் தலைமை வகித்தார். வட்டார ஆலோசனைக் குழுத் தலைவர் சித்தேஸ்வரன் முன்னிலை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில் 2013-14- ஆம் ஆண்டுக்கான அட்மா திட்டப் பணிகளுக்கு மத்திய அரசின் முதல் கட்ட  நிதியான ரூ.70,414 ஒதுக்கீடு குறித்து விவாதிக்கப்பட்டு, வேளாண்மைத் துறை மூலம் ஒரு பரு கரும்பு நாற்று செயல்விளக்கத் திடல் மூன்று அமைக்கவும், தோட்டக்கலைத் துறை மூலம் நிலப்போர்வைச் செயல் விளக்கத்திடல்  அமைக்கவும் , புதிய தொழில்நுட்பங்கள் குறித்து சாமந்தி பயிரில் பண்ணைப்பள்ளி நடத்தவும்,  எண்ணெய் வித்துகள் சாகுபடி  குறித்து  50 விவசாயிகளுக்கு  பயிற்சி அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜேந்திரன்,  வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் சிவக்குமார்,பழனியப்பன் மற்றும் விவசாயிகள்  கலந்து கொண்டனர்.

**தேங்காய் விலை உயர்வு**

தம்மம்பட்டியில் தேங்காய் விலை உயர்ந்தது.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி, சுற்றுவட்டாரப்  பகுதிகளில் தேங்காய்களின் விற்பனை அதிகரித்துள்ளதால், அதன் விலை உயர்ந்துள்ளது.

கடந்த சில வாரங்கள் வரை பெரிய தேங்காய் ரூ.14 க்கும், சிறிய தேங்காய் ரூ. 8க்கும், மிகச்

சிறிய தேங்காய்கள் ரூ. 6க்கும் விற்பனையானது.

ஆனால், தற்போது சபரிமலை சீசன் தொடங்கி விட்டதால் ஐயப்ப பக்தர்கள் தினந்தோறும் தேங்காய்கள் வாங்குவது அதிகரித்துள்ளது.

இதனால் மிகச் சிறிய ரக தேங்காய்கள் ரூ. 10க்கும், சிறிய தேங்காய்கள் ரூ.15க்கும், பெரிய தேங்காய்கள் ரூ.20க்கும் விற்பனையாகி வருகிறது.

**சின்னவெங்காயம் விதையை உற்பத்தி செய்ய விவசாயிகள் வலியுறுத்தல்**

பல்லடம் பொங்கலூர் அரசு விதைப் பண்ணையில் சின்னவெங்காயம் விதை உற்பத்தி செய்ய வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

பொங்கலூர் அரசு விதைப் பண்ணையில் திருப்பூர் விவசாயிகள் குறைதீர் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமை வகித்தார் .

கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகி மனோகரன் பேசியது: பி.ஏ.பி. பாசன கால்வாயில் முதல் மண்டல பாசன காலம் துவங்குவதற்கு முன், தண்ணீர் கடை மடை பகுதி வரை சென்றடைய ஏதுவாக முத்தரப்பு ஆலோசனைக் கூட்டம் நடத்த வேண்டும்.

உழவர் உழைப்பாளர் கட்சி நிர்வாகி ஈஸ்வரமூர்த்தி: தாராபுரம் பகுதியில் அமராவதி ஆற்று தண்ணீர் மூலம் நெல் சாகுபடி நடைபெறுகிறது. இப் பயிர்களை காப்பாற்ற அலங்கயம், குறிஞ்சிபாடி உள்ளிட்ட 4 வாய்க்காலிலும் தண்ணீர் விட வேண்டும். தாராபுரம் பகுதியில் அடங்கல் கணக்கெடுப்பு எடுக்க வேண்டும். வறட்சியால் தண்ணீர் தீர்வை வரி விதிக்கக் கூடாது.

விவசாயி ஈஸ்வரன்: பொங்கலூர் தெற்கு பகுதியில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படவில்லை.

விவசாயி கோபால்: செஞ்சேரிப்புத்தூர் முதல் வாவிபாளையம் வரை பி.ஏ.பி. வாய்க்காலில் மின் மோட்டார் வைத்து தண்ணீர் திருட்டு அதிகமாக நடைபெறுகிறது. இதனால் திருப்பூர் மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். இதுகுறித்து கோவை ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு ரூ.30 ஆயிரமும், பாதித்த மாடுகளுக்கு ரூ.10 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும். பல்லடம் -காங்கயம் சாலையில் தாயம்பாளையம் பகுதியில் சாலை பழுதடைந்துள்ளது.

முன்னாள் எம்.எல்.ஏ. பழனிசாமி: கோ.5 என்ற ரக சின்னவெங்காய விதையை வாங்கி விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். வெளிச்சந்தையில் ஒரு கிலோ ரூ.4 ஆயிரம் வரை விற்கப்படுகிறது. பொங்கலூர் அரசு விதைப்பண்ணையில் இந்த ரக விதையை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு சலுகை விலையில் விற்பனை செய்ய வேண்டும். வறட்சியால் வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பி செலுத்த முடியவில்லை.

ஊராட்சித் தலைவர் பார்த்தசாரதி: வாவிபாளையம் ஊராட்சி கழுவேறிபாளையம், கோட்டப்பாளையம் பகுதியில் கடந்த 15 நாள்களாக தெரு விளக்கு எரியவில்லை. கள்ளிப்பாளையம் மின் வாரிய அலுவலகத்தில் சொல்லியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

ஆட்சியர் கு.கோவிந்தராஜ்: திருப்பூர் மாவட்டத்தில் 3 லட்சத்து 9 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. அவற்றில் 3 லட்சத்து 5 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. மீதமுள்ள கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 125 இடங்களில் தீவன பயிர் கிடங்கு அமைக்கப்படவுள்ளது. அதில் திருப்பூர் மாவட்டத்தில் மூலனூர்,காங்கயம், செங்கப்பள்ளி, வாழப்பாடி(உடுமலை)ஆகிய இடங்களில் தலா ரூ.10 லட்சம் மதிப்பில் கிடங்கு அமைக்கப்படும்.

பி.ஏ.பி. வாய்க்காலில் தண்ணீர் கடைமடை பகுதி வரை சென்றடைய தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது. தண்ணீர் திருடியதாக 12 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மின் மோட்டார் காப்பர் ஒயர் திருடிய 3 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்ததால் காப்பார் ஒயர் திருட்டு தற்போது நடைபெறுவதில்லை.

பொங்கலூர் அரசு விதைப்பண்ணையில் சின்ன வெங்காயம் விதை உற்பத்தி செய்வது குறித்து பரிசீலனை செய்யப்படும். மாவட்ட வருவாய் அலுவலர் கஜலட்சுமி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் முகமது கலிமுல்லா உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**கோமாரி நோயை கட்டுப்படுத்த பாஜக கோரிக்கை**

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உடுமலை ஒன்றிய பாஜக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. ஒன்றிய அமைப்பாளர் எம்.டி.சேனாதிபதி தலைமை வகித்தார்.

மாவட்டச் செயற்குழு உறுப்பினர் வடுகநாதன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

கால்நடைகளுக்கு பரவும் கோமாரி நோயை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும். மின் வெட்டை விரைவில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். உடுமலையை அடுத்துள்ள கரட்டுமடம் மேல்நிலைப் பள்ளி அருகில் செயல்படும் மதுபானக் கடையை அகற்ற வேண்டும். நிர்வாகிகள் மணிகண்டன், சின்னத்துரை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இணை அமைப்பாளர் சுப்பிரமணியம் நன்றி கூறினார்.

**பல்லடம் கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை வீழ்ச்சி**

பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலையை கிலோவுக்கு ரூ.59 ஆக நிர்ணயம் செய்தது. கோழி இறைச்சி விற்பனை குறைவால், புதன்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோவுக்கு ரூ.52 ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டது.

**கோமாரி நோய் தாக்கி பசு மாடு சாவு**

திருமங்கலம் அருகே ஆலம்பட்டியில் கோமாரி நோய் தாக்கி பசுமாடு புதன்கிழமையன்று இறந்து போனது. இதையடுத்து கால்நடைத்துறை மருத்துவர்கள் தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

திருமங்கலம் அருகே ஆலம்பட்டியைச் சேர்ந்தவர் கருப்பையா(48).இவரது பசுமாடு கடந்த இரண்டு நாட்களுக்கு மேலாக நோய்வாய்பட்டிருந்தது. இந்நிலையில் புதன்கிழமை திடீரென இறந்து விட்டது. இதற்கு கோமாரி நோய் தான் காரணம் எனதெரியவந்துள்ளது. ஆலம்பட்டி கிராமத்தில் மேலும் சில மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்கியுள்ளது. அந்த மாடுகளுக்கு மருத்துவர்கள் தடுப்பூசி போட்டனர்.

இறந்து போன பசு மாட்டின் உரிமையாளர் கருப்பையா கூறுகையில், கால்நடை மருத்துவர்களை அணுகினால் ஆலம்பட்டி பகுதிக்கு விடத்தக்குளம் மருத்துவர்கள் தான் சிகிச்சையளிக்க வேண்டும் என்றனர். தடுப்பூசி போடப்பட்டிருந்தால் எனது மாடு இறந்திருக்காது, கால்நடைத்துறையினர் உடனடியாக கிராமப் பகுதிகளில்

முகாமிட்டு கோமாரி நோய் பரவாமல் தடுக்க வேண்டும் என்றார். கால்நடை மருத்துவர்களிடம் இது குறித்து கேட்ட போது, கிராமப்பகுதிகளில் தடுப்பூசி தொடர்ந்து போட்டு வருகிறோம் என்றனர்.

**மேலூரில் காணைநோயால் கால்நடைகள் சாவு**

மேலூர் அருகே உள்ள எட்டிமங்கலம் கிராமத்தில் காணைநோய் பாதிப்பு காரணமாக பசு மற்றும் இரு கன்றுகள் புதன்கிழமை இறந்தன.

மேலூர் வட்டாரத்தில் கால்நடைகளுக்கு காணைநோய் பாதிப்பு பரவலாகக் காணப்படுகிறது. எட்டிமங்கலம் கிராமத்தில் சுரேந்தர் என்பவரது பசுவும், கல்லாணை, சுந்தரம் ஆகியோருடைய கன்றுகளும் இறந்தன. மேலூர் கால்நடை மருத்துவர் கால்நடைகளுக்கான தடுப்பூசி போடும் நடவடிக்கை மேற்கொண்டனர்.

நோய் பாதிப்பை தடுக்க மருத்துவர்கள் ஆலோசனை: காணை பாதித்த பசுக்களின் பாலை மனிதர்கள் காய்ச்சிக்குடிப்பதால் பாதிப்பு இல்லை. அதேசமயத்தில் கன்றுகளை தாயிடம் பால்குடிக்க விடக்கூடாது. அதிலுள்ள கிருமி கன்று இறக்க காரணமாகிவிடும். பாலைக்கறந்து நன்றாக கொதிக்கவைத்து ஆறியபின் பாட்டில் மூலம் கன்றுக்கு பாலைக்கொடுக்கலாம். பசுக்கள் நிறுத்திவைக்கப்படும் கொட்டத்தில் சாதாரண பிளீச்சிங் பவுடரை நன்கு தூவவேண்டும். இதனால் நோய்கிருமி பரவலை தடுக்கமுடியும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

**வாடிப்பட்டி பகுதியில் மானிய விலையில் இடுபொருள்கள்**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி கோட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ப.ராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை: வாடிப்பட்டி வட்டத்தில் மானிய விலையில் விதைகள் மற்றும் வேளாண்மை கருவிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

களையெடுக்கும் கருவியின் முழுவிலை ரூ.30,500. இதில் 50சதவிகிதம் மானியமாக ரூ.15, 000 போக ரூ.15,500க்கு விற்கப்படுகிறது. தானியங்கி விதை விதைக்கும் கருவி முழுவிலை ரூ.41, 500. இதில் 50 சதம் மானியம் ரூ.20, 000 போக ரூ.21,500க்கு விற்கப்படுகிறது. இந்த பருவத்திற்கு ஏற்ற நெல் ஏடிடீ(ஆர்)45ரக விதைகள் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தில் கிலோவிற்கு மானியம் ரூ.5ம்,

விதைக்கிராமத்திட்டத்தில் கிலோவிற்கு ரூ.10ம் மானியத்தில் விநியோகிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலர் பானுமதி, துணைவேளாண்மை அலுவலர் மார்க்கண்டன் ஆகியோரை 9688135285, 9443975280 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

**தென்னை மரங்களை காப்பீடு செய்ய அனுமதி**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பகுதியில் கடந்த ஆண்டு வறட்சியின் காரணமாக தென்னை மரங்கள் பட்டுப் போனது. இதனால் இந்த ஆண்டு தென்னை மரங்களை காப்பீடு செய்வதற்கு அரசு அனுமதித்துள்ளது.

அதன்படி அலங்காநல்லூர் வேளாண்மை அலுவலகத்தில் காப்பீடு செய்யும் பணி தொடங்கியுள்ளது. இப்பகுதி தென்னை விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் நெல் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் உளுந்து, பாசிப்பயறு பயிரிடலாம். தவிர அறுவடை செய்யப்பட்ட நெல் தானியங்களை 12 சதவீதம் ஈரப்பதத்துடன் உலர வைத்து அருகாமையில் உள்ள சேமிப்பு தானிய கிட்டங்கியில் சேமிக்குமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தகவலை அலங்காநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் ராமலெட்சுமணன், வேளாண்மை அலுவலர் ஸ்ரீதர் ஆகியோர் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

**திண்டுக்கல் வட்டார விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த உழவர் மையம்**

திண்டுக்கல் வட்டார விவசாயிகள் பயன்பெறும் வகையில், ரூ. 1.50 கோடி செலவில் ஒருங்கிணைந்த உழவர் மையம் கட்டப்பட்டுள்ளது.

அனைத்துப் பணிகளும் முடிவடைந்த நிலையில், அந்தக் கட்டடம் விரைவில் பயன்பாட்டுக்காகத் திறக்கப்பட உள்ளது.

திண்டுக்கல்-நத்தம் சாலையில் உள்ள கொடகனாறு சுற்றுலா மாளிகை அருகில், பொதுப்பணித் துறை மூலம் கட்டப்பட்டுள்ள உழவர் மையம் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளை, மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

ரூ.1.50 கோடியில் கட்டப்பட்டுள்ள இந்த உழவர் மையத்தில், திண்டுக்கல் வட்டாரத்துக்கான உதவி வேளாண்மை அலுவலகம், உதவி தோட்டக்கலை அலுவலகம், விதை ஆய்வு மையம், விதை சான்றளிப்பு மையம், பயிற்சிக் கூடம், விவசாயிகளுக்கான காத்திருப்போர் அறை உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

மேலும், விவசாயிகளின் பயன்பாட்டுக்காக இணையதள வசதியுடன் கூடிய கணினி அறை மற்றும் ஏ.டி.எம். மையமும் தொடங்கப்பட உள்ளது. இந்த அலுவலகம் செயல்பாட்டுக்கு வந்த பின்னர், திண்டுக்கல் வட்டார விவசாயிகள், தங்களுக்கு தேவையான அனைத்து தகவல்களையும் ஒரே இடத்தில் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

உழவர் மையத்தின் அருகே ரூ.67.68 லட்சம் செலவில் பிற்படுத்தப்பட்ட மாணவியருக்கான தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளது. அறைக்கு 10 பேர் வீதம் 50 மாணவிகள் தங்கும் வகையில் 5 அறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும், நவீன வசதிகளுடன் கூடிய சமையல் அறை, உணவுக் கூடம், உணவுப் பொருள் வைப்பறை, காப்பாளர் அறை, கழிப்பறை மற்றும் மாற்றுத் திறனாளிக்கான தனிக் கழிப்பறை ஆகியவற்றுடன் சுமார் 465 சதுர அடியில் இந்த விடுதி கட்டப்பட்டுள்ளது.

இதே வசதிகளுடன், 100 மாணவிகள் தங்கும் வகையில் சீர்மரபினருக்கான (கள்ளர்) தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளது. 885 சதுர அடியில் ரூ. 1.14 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள இந்த விடுதி, நாகல்நகர் பகுதியில் அமைந்துள்ளது.

கட்டடங்களை ஆய்வு செய்த பின்னர், ஆட்சியர் ந. வெங்கடாசலம் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், பொதுப்பணித் துறை மூலம் நபார்டு பள்ளி கட்டடங்கள், அரசு தொழிற்பயிற்சி கூடம், வருவாய்த் துறை, வணிவரி மற்றும்

பதிவுத் துறை, நீதிமன்றக் கட்டடங்கள்  உள்பட ரூ. 50 கோடிக்கும் மேற்பட்ட பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

ஆய்வின்போது, பொதுப்பணித் துறைச் செயற்பொறியாளர் மு. மணி, உதவிச் செயற்பொறியளார் கு. கோபி, வேளாண்மை துணை இயக்குநர் மத்திய திட்டம்(பொறுப்பு) கே. செல்வராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர் வெங்கடேசன், வேளாண்மை அலுவலர் ஆர். சின்னச்சாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நத்தம் பகுதியில் பருவமழை மந்தம்:மா மரங்களுக்கு மருந்து தெளிக்கும் பணி தாமதம்**

நத்தம் பகுதிகளில் பருவமழை பொய்த்துள்ளதால், மா மரங்களுக்கு மருந்து தெளிக்கும் பணி தாமதப்பட்டு வருகிறது.

சிறுகுடி, செந்துறை, சமுத்திராபட்டி, மணக்காட்டூர், மலைகேணி, கோபால்பட்டி, பரளி, முளையூர் உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 15 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் மாந்தோப்புகள் உள்ளன.

இந்நிலையில், இந்த ஆண்டு ஜூன் மாதம் பெய்ய வேண்டிய பருவமழையும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யவேண்டிய வடகிழக்குப் பருவமழையும் சரிவர பெய்யாமல் பொய்த்துவிட்டது.

இது குறித்து, தென்னை, மா மர பண்ணையின் தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது கூறுகையில், போதுமான மழை இல்லாததால், விவசாயப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும், ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் மா மரங்களுக்கு மகசூல் பெருக்கத்துக்காக மருந்து தெளிப்பது வழக்கம். ஆனால், இந்தாண்டு பருவமழையும் குறைந்து, வறட்சி நிலை நீடித்துள்ளது. எனவே, மா மரங்கள் பசுமை மாறி காய்ந்து பட்டுப்போயுள்ளது. தற்போது, பனிப்பொலிவு தொடங்கி உள்ளதால், மழைக்கான அறிகுறியும் தள்ளிப்போகிறது. இதனால், மா விவசாயிகள் கவலையடைந்துள்ளனர் என்றார்.

**வறட்சியில் இருந்து நெற்பயிர்களை காக்கும் நவீன பாக்டீரியா கரைசல்**

நெற்பயிர்கள் வறட்சியினால் வாடுவதை தடுக்கவும், வெப்பத்திலிருந்தும் பாதுகாக்க கூடியதுமான நவீன பாக்டீரியா கரைசலை ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் புதன்கிழமை குளபதம் கிராமத்தில் அறிமுகம் செய்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் மழையை நம்பி இருக்கும் மாவட்டம். வறட்சிக்கு இலக்காகும் மாவட்டம். இங்கு பெரும்பான்மையாக நெற்பயிர் 1.3 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்படுகிறது. இவ்வாறு செய்யப்படும் சாகுபடியானது பயிர் முளைத்து தூர்கட்டும் பருவத்திலிருந்து வறட்சிக்கு உள்ளாகி இழப்பை ஏற்படுத்துகிறது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் மிகுந்த கவலை அடைந்து வந்தனர். இந்த பிரச்னைக்கு தீர்வாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பி.பி.எம்.எம். (பிங்க் பிக்மென்டட் பேக்கல்டேடிங் மெத்தைலோ பாக்டீரியம்) என்ற பாக்டீரியா கரைசலை ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல் முறையாக அறிமுகம் செய்துள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஒன்றியத்தை சேர்ந்த குளபதம் கிராமத்தில் நவீன பாக்டீரியா கரைசலை அறிமுகப்படுத்தும் வகையில் தெளிக்கப்பட்டது. இதனை ராமநாதபுரம் ஆட்சியர் க. நந்தகுமார் பார்வையிட்டார். நவீன பாக்டீரியா கரைசல் குறித்து ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ரா. துரைசிங் கூறியதாவது:

இதை தெளிப்பதன் மூலம், இந்த பாக்டீரியா இலைகளின் மேல் வாழ்ந்து கொண்டே மெத்திலோ பாக்டீரியா பயிர் வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகிளின், ஆக்ஸின் மற்றும் யூரியேஸ் என்ற நொதி பொருள்களை பயிர்களுக்கு அளிக்கும்.

இதனால் பயிரானது வறட்சியால் விரைவில் வாடுவது தடுக்கப்படுகிறது. மேலும் பயிர்களுக்கு மாதம் ஒருமுறை தெளிப்பான் மூலம் வறட்சி மற்றும் வெப்பத்திலிருந்தும் பயிர்களை பாதுகாக்கும்.

இக்கரைசலை ஏக்கருக்கு 200 மி.லி. என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் அல்லது பூம்ஸ்பிரேயர் என்ற விசைத்தெளிப்பான் மூலமும் தெளிக்கலாம்.

இத்திட்டம் குறித்து வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர்கள் குணசேகரன், துக்கையண்ணன், மீனாட்சி,சரவணன், ராம்குமார், ஜெயஶ்ரீநிவாசன் ஆகியோர் தனித்தனியாக பல்வேறு கிராமங்களில் உள்ள

விவசாயிகளை சந்தித்து இத்தொழில் நுட்பத்தை விளக்கி பிரபலப்படுத்தி வருகின்றனர்.

இது குறித்து மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள ராமநாதபுரம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் கடலோர உவர் ஆராய்ச்சி மையத்தை அணுகலாம். மேலும் நேரில் வரமுடியாத விவசாயிகளாக இருந்தால் 04567-232639 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரு சில இடங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கக்கடலில் உருவான "லெஹர்' புயல் இன்று மாலை ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் அருகே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தமிழகத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் புதன்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு(மில்லி மீட்டரில்):

மேட்டுப்பாளையம் - 20, திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி, ஆயக்குடி - 10.

**புயலால் தமிழகத்தில் பருவமழை குறைந்தது**

பைலின், ஹெலன் மற்றும் லெஹர் புயல்களின் தாக்கத்தால் தமிழகத்தில் பெய்ய வேண்டிய வடகிழக்கு பருவமழையின் அளவு 30 சதவீதம் குறைந்துள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் வரும் திங்கள்கிழமை (டிசம்பர் 2) முதல் மாநிலத்தில் பருவமழை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை கடந்த அக்டோபர் மாதம் தொடங்கியது.

இந்த ஆண்டு பருவமழை சராசரி அளவைக் காட்டிலும் அதிகமாகப் பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பருவமழைக் காலம் தொங்கி கிட்டத்தட்ட 2 மாதங்களாகி0யும் சராசரி அளவை விட குறைவாகவே மழை பதிவாகியுள்ளது.

30 சதவீதம் குறைவு: கடலூர், சென்னை உள்ளிட்ட வடகடலோர மாவட்டங்களில் சராசரியாக 80 செ.மீ மழை பதிவாக வேண்டும். ஆனால் தற்போது 40 செ.மீ அளவு மழை மட்டுமே பெய்துள்ளது. தமிழகத்துக்கு வரவேண்டிய மழை வாய்ப்பு, ஹெலன் மற்றும் லெஹர் புயல் காரணமாக ஆந்திரத்தில் பெய்து வருகிறது.

இது குறித்து வானிலை மையத்தின் துணை இயக்குநர் ஒய்.இ.ஏ.ராஜ் கூறியது:

தமிழகத்தில் ஆண்டுக்கு 92 செ.மீ மழை சராசரியாக பெய்ய வேண்டும். கடந்த 2005 லிருந்து 2011-ஆம் ஆண்டு வரை சராசரி அளவை விடக் கூடுதலாக மழை பெய்தது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக மழை அளவு குறைந்துள்ளது. கடந்த ஆண்டில் வடகிழக்கு பருவமழையின் அளவு 16 சதவீதம் குறைந்தது.

இந்த ஆண்டைப் பொருத்த வரை, 30 சதவீதம் குறைவாக மழை பதிவாகியுள்ளது.

காரணம் என்ன: கடந்த இரு மாதங்களுக்குள் வங்கக்கடலில் 4 புயல்கள் உருவாகியுள்ளன. பைலின், ஹையான், ஹெலன், லெஹர் ஆகிய 4 புயல்கள் அந்தமான் கடல்பகுதியில் உருவாகின.

இவற்றில் ஹெலன், லெஹர் புயல்கள் தமிழகத்தை நோக்கி வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவை ஆந்திரத்தை நோக்கி நகர்ந்தன. இந்த புயல்கள் காற்றில் உள்ள ஈரப்பசையை உறிஞ்சி எடுத்துச் சென்றதால் தமிழகத்தில் மழை வாய்ப்பு போதிய அளவு இல்லை. இதனால்தான் பருவமழை அளவு குறைந்தது.

இருப்பினும் தற்போது மழை பெய்வதற்கு சாதகமான சூழல் நிலவி வருகிறது. எனவே டிசம்பர் 2 அல்லது 3 - ஆம் தேதி முதல் தமிழகத்தில் பருவமழை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

**கோமாரி நோய்: கால்நடை சந்தைகளுக்கு தடை**

கால்நடைகளை கோமாரி நோய் தொற்றில் இருந்து காக்கும் வகையில் மாவட்டத்தில் நடைபெறும் கால்நடை சந்தையை நடத்த தடைவிதித்து ஆட்சியர் பாஸ்கரன் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தொற்றுவதில் இருந்து பாதுகாக்கும் வகையில், பிற மாவட்டங்களில் இருந்து கால்நடைகள் சந்தைக்கு வருவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கால்நடை நோய்கள் சட்டம் 18-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்குள்பட்ட மாவட்டத்தில் அச்சிறுப்பாக்கம், வாலாஜாபாத், திருக்கழுகுன்றம், மானாமதி, பல்லாவரம், அணைக்கட்டு ஆகிய இடங்களில் இயங்கி வரும் கால்நடை சந்தைகள் அடுத்த 30 நாள்களுக்கு கூடுவது நிறுத்தி வைக்கப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**50 நாள்களில் ஒரு லட்சம் டன் கரும்புகள் அரைத்து சாதனை**

திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டில் கரும்பு அரவை தொடங்கி 50 நாள்களில் ஒரு லட்சம் டன் கரும்புகளை அரைத்து சாதனை புரிந்துள்ளதாக ஆலையின் தலைவர் கைவண்டூர் எம்.எத்திராஜ் புதன்கிழமை தெரிவித்தார்.

திருத்தணி தாலுக்காவில் உள்ள திருவாலங்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை 1982-ல் தொடங்ககபப்ட்டது.

இதில் திருவள்ளூர் மாவட்டத்தின் மொத்த பகுதிகள், வேலூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தின் சில வட்டங்களை உள்ளடக்கி கரும்புகளைப் பெற்று அரைத்து வருகிறது.

நடப்பாண்டுக்கான அரவை கடந்த அக்டோபர் 4-ஆம் தேதி தொடங்கியது.

தொடங்கப்பட்ட சில நிமிடங்களிலேயே இயந்திரங்கள் கோளாறுக் காரணமாக நிறுத்தப்பட்ட அரவை மறுபடியம் சில நாள்களுக்குப் பின் மீண்டும் தொடங்கியது.

இதுகுறித்து கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தலைவர் கைவண்டூர் எம்.எத்திராஜ் தெரிவித்ததாவது: ஆலை அரவை துவங்கி 52 நாள்களான நிலையில் நவம்பர் 25-ம் தேதி ஆலை 1.02 லட்சம் டன்கள் கரும்பு அரைக்கப்பட்டுள்ளது.

இதில் தீபாவளிக்காக இரு நாள்கள் விடுமுறை விடப்பட்ட நிலையில் 50 நாட்களில் ஒரு லட்சம் டன் கரும்பு அரைத்து ஆலை பணியாளர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

கடந்த வருடத்தில் இதே நாளில் 57 ஆயிரத்து 500 டன்கள் மட்டுமே அரைக்கப்பட்டது.  இந்த ஆண்டு அரவை பருவம் முடியும் நிலையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட அதிகமாக கரும்பு அரைத்து சாதனை புரிய திட்டமிட்டுள்ளோம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.11.2013**

## கால்நடை பராமரிப்பு துறை கோமாரி நோய் தடுக்க தீவிரம்

ஊத்தங்கரை: ஊத்தங்கரை யூனியனில் கோமாரி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த, தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊத்தங்கரை யூனியனில் காமராசர் நகர், பாவக்கல், காட்டேரி, ஊத்தங்கரை மற்றும் சுற்றுப்புற கிராம பகுதியில், கோமாரி நோயால், 50க்கும் மேற்பட்ட மாடுகள் இறந்தது. உடனடியாக மாவட்ட நிர்வாகம், கால்நடை பராமரிப்பு மூலம் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டது, பாதிக்கப்பட்ட கிராமங்களில் தடுப்பு நடவடிக்கைகளில் மேற்கொள்ள, 15 மருத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டு, கால்நடைகளுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலவசமாக பிளிச்சிங் பவுடர், கிருமி நாசினி திரவங்கம் வழங்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தீவிர நடவடிக்கைகள் காரணமாக, கோமாரி நோய் முழுவதுமாக கட்டுப்படுத்தப்பட்டு மற்ற பகுதியில் பரவமால் தடுக்கப்பட்டுள்ளதாக, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## வேளாண் துறை சார்பில் ரூ.1.05 கோடி மதிப்பில் இயந்திர கருவி வழங்கல்

நாமக்கல்: நாமக்கல் கலெக்டர் அலுவலக வளாகத்தில், வேளாண் துறை சார்பில், 1.05 கோடி ரூபாய் மதிப்பில், விவசாயிகளுக்கு, இயந்திரங்கள் மற்றும் பல்வேறு வேளாண் பொருட்கள் வழங்கும் விழா நடந்தது.

கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். அதில், கொழுக்கலப்பை, 45 பேருக்கும், சுழற்கோப்பை, 14 பேருக்கும், பேட்டரி ஸ்பிரேயர், ஆறு பேருக்கு, இரண்டு பேருக்கு பவர் ஸ்பிரேயர், எட்டு பேருக்கு கை ஸ்பிரேயர், ஐந்து பேருக்கு, தீவன புல்வெட்டும் கருவி வழங்கப்பட்டது.

மேலும், எட்டு பேருக்கு பவர் டில்லர், ஏழு பேருக்கு விசை கலையெடுக்கும் கருவி, ஒருவருக்கு, நெல் அறுவடை இயந்திரம், ஒருவருக்கு வைக்கோல் கட்டு கட்டும் கருவி, ஒருவருக்கு பல்வகை பயிர் கதிரடிக்கும் கருவி என, மொத்தம், 110 பேருக்கு, 1.05 கோடி ரூபாய் மதிப்பில், வேளாண் இயந்திரக்கருவிகள் வழங்கப்பட்டது.

அதில், விவசாயிகள் பங்குத்தொகை, 69.52 லட்சம், அரசு மானியம், 36.05 லட்சம் ரூபாய்.

""விவசாய பெருமக்கள், அரசு மானியத்துடன் வழங்கப்பட்ட, வேளாண் இயந்திரங்களை, நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும்," என, கலெக்டர் அறிவுறுத்தினார்.

வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் இளையப்பன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் கிருஷ்ணகுமார், விவசாய சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கோமாரி தாக்கி இறந்த கால்நடைக்கு இழப்பீடு பால் உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை

நாமக்கல்: ""கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு, இழப்பீடு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க பொதுச்செயலாளர் ராஜேந்திரன் கூறினார்.

நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், நேற்று நடந்தது. கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகித்து பேசியதாவது:

நாமக்கல் மாவட்டத்தில், ஆண்டு சராசரி மழையளவு, 776 மி.மீ., நடப்பு ஆண்டு, 735 மி.மீ., மழை பெய்ய வேண்டும். இதுவரை, 530 மி.மீ., மட்டுமே பெய்துள்ளது. 205 மி.மீ., குறைவாக உள்ளது. மாவட்டத்தில், 214 ஏரிகள் உள்ளன. அதில், ஆறு ஏரிகளில் மட்டுமே தண்ணீர் உள்ளது. 200 ஏரிகள் தண்ணீரின்றி, வறண்டு காணப்படுகிறது.

பலரும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதற்காக, இரண்டு நிமிடம் மட்டுமே ஒதுக்கப்பட்டது. படிப்படியாக உயர்ந்து, தற்போது, ஐந்து நிமிடம் வரை பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அரசின் நலத்திட்டங்களை, அனைவரும் பெற வேண்டும் என்பதே, அரசின் நோக்கம்.

தகுதியான பயனாளிகள் ஒருவரும் விடுபட்டுவிடக் கூடாது என்பதில், மாவட்ட

நிர்வாகம், கண்ணும் கருத்துமாக உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில், இரண்டரை ஆண்டுகளில், விரைவு வழி பட்டா மாறுதல் முகாம் மூலம், 1.26 லட்சம் மனுக்கள் பெறப்பட்டது. அதில், 86 ஆயிரம் பேருக்கு, பட்டா உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும், சிறப்பு முகாம் மூலம் பெறப்பட்ட, 4,700 மனுக்களில், 3,800 பேருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 900 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. அதேபோல், அம்மா திட்ட முகாம் மூலம், 32 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். அதன் காரணமாக, மாவட்டத்தில், திங்கட்கிழமை நடக்கும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மனுக்கள் கொடுப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

ராஜேந்திரன் (பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க பொதுச்செயலாளர்) பேசியதாவது: மூன்று ஆண்டுகளில், பசுந்தீவனத்தின் விலை, 100 சதவீதம் உயர்ந்துள்ளது. அதனால், பசும்பாலுக்கு, பத்து ரூபாய் உயர்த்தி, 30ம், எருமைப்பாலுக்கு, 15 ரூபாய் உயர்த்தி, 41ம் வழங்க கோரிக்கை வைத்துள்ளோம். கோமாரி நோய், மாவட்டத்தின் ஒரு சில இடங்களில், பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசுக்கு கருத்துரு அனுப்பி, இழப்பீட்டுத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.

### கரும்பு சாகுபடியில் ஊடுபயிராக உளுந்து: விவசாயிகள் ஆர்வம்

கள்ளக்குறிச்சி : கள்ளக்குறிச்சியில் கரும்பு சாகுபடியில் ஊடுபயிராக உளுந்து பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி பகுதியில் இரண்டு கூட்டுறவு ஆலை கள் உட்பட மூன்று சர்க்கரை ஆலைகள் உள்ளன. இதனால் ஆண்டுதோறும் 37,500 ஏக்கர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டு வருகிறது. ஏரி, அணைகள் மூலம் பாசனம் பெற்றுவந்த நிலையில் பருவமழை பொய்த்து வருவது, மின்தட்டுப்பாடு, கூலி ஆட்கள் கிடைக்காதது உட்பட பல காரணங்களால் விவசாயிகள் பாதித்தனர்.

கரும்பு சாகுபடி முதல் அறுவடை வரை இயந்திரம் பயன்பாடு போன்ற நவீன யுக்திகளை கையாண்டு வருகின்றனர். அதற்கேற்ப செம்மை கரும்பு சாகுபடி

செய்வதிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தண்ணீர் குறைவு, குறைந்த ஆட்களே போதுமானது, பாதிப்பின்றி பயிர்கள் வளர்வது மற்றும் அரசு மானியம் வழங்குவதால் செம்மை கரும்பு சாகுபடி பரப்பளவு ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது.

கள்ளக்குறிச்சி அடுத்த தண்டலை மற்றும் சுற்று பகுதியில் சாகுபடி செய்துள்ள கரும்பில் குறுகிய கால பயிரான உளுந்தை ஊடுபயிராக பயிரிட்டுள்ளனர். மூன்று மாத பயிரான உளுந்து கரும்பின் வளர்ச்சிக்குள் அறுவடை செய்வதால் விவசாயிகளுக்கு இரட்டை லாபத்தை தருகிறது.

## பருத்தி பூ உதிர்வால் விவசாயிகள் கலக்கம்

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் மானாவாரியில் பயிரிட்டுள்ள பருத்தியில் பூக்கள் உதிர்வதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த துளுக்கப்பாளையத்தில் மானாவாரி நிலத்தில் 10 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தில் பருத்தி பயிரிடப்பட்டுள் ளது. உயர்ரக பருத்தி பயிரிடப்பட்டு மூன்று மாதங்கள் ஆன நிலையில் பூக்கள் பூத்து காய்கள் வைத்துள்ளன. இதில் பல செடிகளில் பூத்திருந்த பூக்கள் உதிர்வதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

விவசாயி சேகர் கூறிய போது, மண்ணின் தரத்தை சோதனையிடாமல் பருத்தி விதைத்தோம். தற்போது பனிப்பொழிவும் இருப்பதால் பூக்கள் உதிர்வின் காரணத்தை அறியமுடியவில்லை. பல இடங்களில் கடன் வாங்கி பருத்தி விதைத்துள்ளோம். பூக்கள் உதிர்வதால் மகசூலுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. வேளாண் அதிகாரிகள் பூக்கள் உதிர்வை கட்டுப்படுத்திட உதவி செய்தால் நன்றாக இருக்கும் என்றார்.பருத்தியில் காய் வைத்துள்ள நிலையில் பல செடிகளில் பூக்கள் உதிர்வதால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

## மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவிகள்

மயிலம் : மயிலம் ஒன்றியத்தில் வேளாண்மை தோட்ட கலைத் துறை சார்பில் முழு மானியத்தில் சொட்டுநீர் பாசனத்திற்கான உபகரணங்கள் வழங்கப்படுகிறது. இது குறித்து மயிலம் வட்டார தோட்ட கலைத் துறை உதவி இயக்குனர் சுமதி கூறியதாவது.

தோட்ட பயிர்கள் பயிரிட்டுள்ள சிறு, குறு விவசாயிகளுக்கு நூறு சதவீத

மானியத்தில் சொட்டு நீர் பாசனத்திற்கான உதவிகள் செய்து தரப்படுகிறது. பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசன கருவி கள் நடப்பு ஆண்டில் வழங்கப்படுகிறது.

நூறு சதவீத மானியத்தில் 6 ஹெக்டேர் பரப்பில் நட மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தலா ஒரு ஹெக்டேர் அளவில் சாகுபடி செ#ய மல்லிகை, கனகாம்பரம் செடிகள் நூறு சதவீத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. மயிலம் பகுதியில் காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு, துறை சார்பில் 50 சத மானியத்தில் மிள காய், வெண்டை, பாகல், பீர்க்கன் காய் விதைகள் வழங்கப்பட்டுள்ளது.தங்கள் நிலத்தின் சிட்டா, அடங்கல் பெற்று மயிலம் தோட்ட கலைத் துறையை அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

## மயிலம் பகுதியில் சின்னவெங்காயம் சாகுபடி தீவிரம்

கண்டமங்கலம் : மயிலம் பகுதியில் விவசாயிகள் சின்ன வெங்காயம் மற்றும் மிளகாய் சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

மயிலம் பகுதியில் தழுதாளி, பெரும்பாக்கம், கண்ணியம், எறையூர், பரிக்கல்பட்டு, எரளிக்குப்பம், மேட்டு நத்தம், எடப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் பணப்பயிரான சின்ன வெங்காயம், மிளகாய் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டு 400 ஏக்கர் பரப்பளவில் சின்ன வெங்காயம், மிளகாய் சாகுபடி செய்துள்ளனர். சென்ற ஆண்டு சின்ன வெங்காயம் 80 கிலோ மூட்டை 1700 முதல் அதிகபட்சம் 2000 ரூபாய் வரை மட்டுமே விற்றது.

இந்த இந்த ஆண்டு வெங்காயம் விலை உயர்ந்துள்ளதால், 80 கிலோ மூட்டை வெங்காயம் 2900 ரூபாய்க்கு (கிலோ ரூ.36.25) விற்கிறது. இங்கு சாகுபடி செய்யும் வெங்காயம், மிளகாய், திருச்சி மற்றும் சென்னை கோயம்பேடு மார்க்கெட் உட்பட பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த ஆண்டு பெய்த தொடர் மழையால் வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் பாதித்தனர். ஆனால் கடந்த ஆண்டைக் காட்டிலும் ஒரு மூட்டைக்கு 900 ரூபாய் அதிகம் கிடைப்பதால் விவசாயிகள் நட்டத்தில் இருந்து மீண்டுள்ளனர்.

சாகுபடி குறைவு

மயிலம் சுற்று வட்டார பகுதியில் கட்டுப்பாடியான விலை கிடைக்காமல் சாகுபடி பரப்பு குறைந்து வருகிறது. பெரிய வியாபாரிகள் விவசாயிகளுக்கு தேவையான விதைகளை சப்ளை செய்கின்றனர்.

இதனால் அறுவடைக் காலத்தில் அவர்கள் நிர்ணயிப்பது விலையாக உள்ளது. வேளாண்மை துறையின் மூலம் விவசாயிகளுக்கு மானிய உதவி மற்றும் தொழில் நுட்ப உதவிகள் அளித்தால் மயிலம் பகுதியில் மீண்டும் வெங்காயம், மிளகாய் சாகுபடி அதிகரிப்பதுடன், விவசாயிகளுக்கு நல்ல விலையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

### சந்தையில் கால்நடைகள் விற்பனை நிறுத்தி வைப்பு

ரிஷிவந்தியம் : அத்தியூர் வார சந்தையில் கால் நடைகள் விற்பனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

பகண்டை கூட்ரோடு அடுத்த அத்தியூர் கிராமத்தில் வாரந்தோறும் செவ்வாய் கிழமை சந்தை நடந்து வருகிறது. கோமாரி நோயால் கடந்த வாரம் கால்நடை விற்பனை சரிந்தது.

கால்நடை விற்பனையாளர்கள் ஏமாற்றமடைந்தனர்.

நேற்று சந்தையில் கால்நடைகள் விற்கவில்லை. ஆடு,மாடுகளுக்கு கோமாரி நோய் பரவுவதால் கால்நடை விற்பனை ஒரு மாத காலத்திற்கு நிறுத்தப்பட்டுள்ளதாக பகுதி கால்நடை வியாபாரிகள் தெரிவித்தனர்.

### கோமாரியால் இறந்த மாடுகளுக்கு இழப்பீடு கோரி கலெக்டருக்கு மனு

கள்ளக்குறிச்சி :

கோமாரி நோய் பாதிப்பால் இறந்த மாடுகளுக்கு இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கலெக்டர் சம்பத்திற்கு மாவட்ட காங்., விவசாய பிரிவு செயலாளர் ராஜு அனுப்பிய மனு:

மாவட்டத்தில் கோமாரி நோய் தாக்குதலால் பல கால்நடைகள் இறந்துள்ளன. கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவாமல் இருக்க அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் கோமாரி நோய் தடுப்பூசி போட்டு கண்காணிக்க வேண்டும். மாவட்டத்தில் கோமாரி நோய் பாதிப்பால் இறந்த மாடுகளுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.25 ஆயிரம் வழங்க தமிழக முதல்வர் ஜெ., மற்றும்

கலெக்டர் சம்பத் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டுள்ளது.

## வசம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் : அதிக லாபம் கிடைப்பதால் மகிழ்ச்சி

கச்சிராயபாளையம் : கச்சிராயபாளையம் பகுதியில் மருத்துவ குணம் கொண்ட வசம்பு நல்ல மகசூல் கொடுத்து அதிக லாபம் கிடைப்பதால், பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கச்சிராயபாளையம் சுற்றியுள்ள 47க்கும் மேற்பட்ட கிராம மக்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாக செய்கின்றனர். இப்பகுதியில் கல்வராயன் மலையின் அடிவாரத்தில் உள்ள கோமுகி அணையின் மூலம் 10,600 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது.

இது தவிர இப்பகுதியில் உள்ள 20 க்கும் மேற்பட்ட ஏரிகள் மற்றும் கிணறுகளின் மூலமும் விவசாயம் செய்யப்படுகிறது.

இப்பகுதி விவசாயிகளின் முக்கிய சாகுபடியாக நெல், கரும்பு, பருத்தி, மஞ்சள் பயிர் செய்யப்படுகிறது. தற்போது பல புதிய பயிர்களை விவசாயிகள் பயிரிடுகின்றனர்.

மருத்துவ குணம்

மருத்துவ குணமுடைய கோலியாஸ், வசம்பு போன்ற பயிர்களை பயிரிடுவதில் கச்சிராயபாளையம் விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்
றனர்.

சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேத மருத்துவத்தில் வசம்பின் வேர் மற்றும் தண்டு பகுதிகள் அதிக அளவு பயன்படுத்தப்படுகிறது.

வயிற்றுப் போக்கு, சீதபேதி, குடல் திருகுவலி, மூலவியாதி, இதயம், கண், காது, வாய் பிரச்சினைகளுக்கும், இருமல், மார்பு சளி, மூர்ச்சை நோய், தீராத கீழ்வாத நோய் போன்றவைகளுக்கு மருந்தாக பயன்படும் வசம்பிற்கு அதிக கிராக்கி உள்ளது.

இஞ்சி குடும்பத்தை சேர்ந்த மருத்துவ குணமுடைய வசம்பு அதிகளவில் இமாலய பிரதேசத்தில் விளைகிறது. தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவிலும் பரவலாக பயிரிடப்படுகிறது.

ஆறு வகை

ஈர நில தாவரமான வசம்பில் அகோரஸ் கேலாமஸ், அகோரஸ் அமெரிக்கானஸ், அகோரஸ் கிராமினஸ், அகோரஸ் டிரைகோட்டரஸ், அகோரஸ் லாட்டிபோலியஸ், அகோரஸ் ஸியான்ஜியஸ் என்ற ஆறு வகைகள் உள்ளன. முதல் வகையான அகோரஸ் கேலாமஸ் இந்தியா மற்றும் அரேபியாவில் உற்பத்தியானது. இந்த வசம்பினை தற்செயலாக ஐரோப்பா, தெற்கு ரஷ்யா, வடக்கு ஆசியா, சைனா, சிபேரியா போன்ற நாடுகளில் கண்டறியப்பட்டது. அகோரஸ் கேலாமஸ் (ஸ்வீட் பிளாக்) என்ற வகை தான் இந்தியாவில் காணப்படுகிறது.

மண் வளம்

வசம்பு செடி சதுப்பு நிலங்கள் செழித்து வளரும். களி மண் மற்றும் நீரினை உரிஞ்சாமல் தக்கவைத்துக் கொள்ளும் மண் வகை களில் வசம்பு செடி நன்கு வளரும். நல்ல வெப்ப மண்டல சூழல் இருந்தால் வசம்பு செழித்து வளரும்.

பயிரிடும் முறை

நோய் தாக்காத ரைசோம்கள் என்ற வசம்பினை நடவுக்கு தேர்வு செய்ய வேண்டும். நெல் பயிர் நடவுக்கு நிலத்தினை தயார் செய்வது போன்று நிலம் தயார் செய்யப்படுகிறது. 30க்கு 30 செ.மீ இடைவெளியில் சாலை முறையில் ரைசோம் களை நட வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு 2.5 டன் ரைசோம்கள் தேவைப்படுகிறது. வசம்பு பயிரினை நடவு செய்ய மார்ச்-ஏப்ரல் சிறந்த பருவ காலம் ஆகும். வசம்பிற்கு அடி உரமாக 10 கி.கி., நைட்ரஜன்.10 கி.கி., பாஸ்பரஸ், 60 கி.கி., பொட்டாசியம் ஆகிய உரங்களை இட வேண்டும். நான்கு மற்றும் எட்டாவது மாதத்தில் 10 கி.கி., நைட்ரஜன் மேல் உரமாக இடப்படுகிறது.

நல்ல சாதகமான சூழலில் 2 மீ வரை வளரும் தன்மை கொண்ட வசம்பு ஒரு வருடத்தில் அறுவடைக்கு தயாராகிறது. அறுவடைக்கு முன்பு நிலங்கள் நன்கு காயவைக்கப்படுகிறது.

மகசூல்

நிலத்தின் அடிபரப்பில் வளரும் வசம்பில் ஏக்கருக்கு 2.5 டன் மகசூல் கிடைப்பதால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கிறது. இதனால் கச்சிராயபாளையம் விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வசம்பினை பயிர் செய்கின்றனர்.

### சம்பா பருவத்தில் கூடுதல் நெல் உற்பத்தி இலக்கு

செய்யூர்: சித்தாமூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்தில் கிணற்று பாசனம் மூலம் கூடுதல் நெல் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.சித்தாமூர் ஒன்றியத்தில், கிணற்று பாசனம் மூலம், 12 ஆயிரம் ஹெக்டேரிலும், ஏரிப்பாசனம் மூலம், 4 ஆயிரம் ஹெக்டேரிலும் சாகுபடி நடக்கிறது. இதில், 11 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது.

கிணற்று பாசனத்தை நம்பி உள்ளவர்கள், முன் கூட்டியே நடவு செய்துள்ளனர்.

ஏரிப் பாசனத்தை நம்பி உள்ளவர்கள், இன்னும் நடவு செய்யவில்லை.

இதுகுறித்து, விவசாயிகள்

கூறியதாவது:

சித்தாமூர் ஒன்றியம் நீர் வளம் உள்ளது. இங்கு கிணற்று பாசனத்தை நம்பி, பயிர் செய்பவர்கள் அதிகம் உள்ளனர்.

மழை பெய்யும் என்ற நோக்கில், ஏரிப் பாசனத்தை நம்பி உள்ள விவசாயிகள், நாற்று விட்டு வைத்துள்ளோம். மழை பெய்யாவிட்டால், விவசாயமே செய்ய முடியாத நிலை ஏற்படும்.

இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

சித்தாமூர் வேளாண்மை உதவி இயக்குனர் கலைமணி கூறுகையில்,

"ஏரிப்பாசனத்தை நம்பி உள்ள, 2,700 ஹெக்டேர் நிலத்தில் மழையை எதிர்பார்த்து விவசாயிகள் உள்ளனர். மழை பெய்தால் இலக்கை எட்டிவிடுவோம். விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது," என்றார்.

### உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உதவி கோரி மனு

காஞ்சிபுரம்: உழவர் பாதுகாப்பு திட்டத்தில் வழங்கப்படும் உதவித்தொகையை, விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என, மனு அளிக்கப்பட்டு உள்ளது.காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரிடம், விவசாயிகள் சங்கத்தினர் அளித்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:காஞ்சிபுரம் மாவட்டத்தில், நலிந்தோர் நல திட்ட துறை மூலம், உழவர் பாதுகாப்பு திட்டத்தில், முதியோர், விதவை, மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்டோர்களுக்கு, தமிழக அரசு உதவித்தொகை வழங்கி வருகிறது. அம்மா திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களுக்கு, உதவித்தொகை வழங்க உத்தரவு

வழங்கிய நிலையில், பயனாளிகளுக்கு, கடந்த, நான்கு மாதங்களாக உதவித்தொகை வழங்கப்படவில்லை. இதனால், மாவட்ட ஆட்சியர் விசாரித்து, உதவித்தொகை கிடைக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கோமாரியை கட்டுப்படுத்த போர்க்கால நடவடிக்கை: விவசாயிகள் கோரிக்கை

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், டி.ஆர்.ஓ., மாரிமுத்து தலைமையில் நடந்தது. வேளாண்துறை இணை இயக்குனர் ஷாஜஹான், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் விஜயகுமார் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.
கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:
விவசாயி தனபதி: புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த, 3 ஆண்டுகளாக பருவமழை பெய்யத்தவறியதால், விவசாயம் அடியோடு முடங்கியுள்ளது. விவசாயிகள் பலத்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். எனவே புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க, அரசுக்கு மாவட்ட நிர்வாகம் சிபாரிசு செய்யவேண்டும். தேசிய பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பிரிமியம் செலுத்திய விவசாயிகளுக்கு, இன்சூரன்ஸ் நிறுவனம் இதுவரை காப்பீட்டு தொகை வழங்கவில்லை. விவசாயிகளிடமிருந்து பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றிவரும் இன்சூரன்ஸ் நிறுவனத்தினர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.
டி.ஆர்.ஓ: பயிர் காப்பீடு குறித்து அடுத்த மாதம் நடக்கும் விவசாயிகள் கூட்டத்தில், இன்சூரன்ஸ் நிறுவனத்தினரை வரவழைத்து உரிய பதில் பெறப்படும்.
விவசாயி ராமசாமி: வானிலை ஆய்வு மையம் புயல் எச்சரிக்கை விடும்போதெல்லாம், மேட்டூர் அணை அடைக்கப்படுகிறது. இதனால் கல்லணை கால்வாயில் திறந்துவிடப்படும் தண்ணீர் கடைமடை பகுதிகளுக்கு செல்லாமல், புதுக்கோட்டை டெல்டா பகுதிகளில் விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. கல்லணை கால்வாயில் தொடர்ந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்கவேண்டும்.விவசாயி மாதவன்: புதுக்கோட்டை மாவட்டத்தில் கோமாரி நோயால் ஏராளமான கால்நடைகள் இறந்துள்ளது. மாவட்டம் முழுவதும் வேகமாக

பரவிவரும் இந்த நோயை கட்டுப்படுத்த, போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். கோமாரி நோயால் இறந்த கால்நடைகள் குறித்து முறையாக கணக்கெடுப்பு நடத்தி, உரிய நிவாரண உதவிகள் வழங்கவேண்டும்.

டி.ஆர்.ஓ: கால்நடைத்துறை சார்பில் கோமாரி நோயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளது. நோய் பாதிப்புள்ள பகுதிகளில் கால்நடைத்துறையினர் முகாமிட்டு, நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கோமாரி நோயினால் இறந்த கால்நடைகளுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

விவசாயி ராமதீர்த்தார்: புதுக்கோட்டை மாவட்ட வனப்பகுதிகளில் தைலமரங்கள், வேலிக்கருவை போன்ற மரங்களை நடவு செய்ய தடை விதிக்கவேண்டும். இந்த மரங்களால் தான் மாவட்டத்தில் வறட்சி நிலவி,நிலத்தடி நீர்மட்டமும் குறைகிறது.

## உயிர் உரங்கள் பற்றிய தொழிற்நுட்ப கருத்தரங்கு

ஊட்டி : கோவை வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனம் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் சார்பில், ஊட்டி எச்.ஏ.டி.பி., அரங்கில், உயிர் உரங்கள் பற்றிய தொழிற்நுட்பம், உற்பத்தி, மேலாண்மை மற்றும் பயன்பாடு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி கருத்தரங்கு நடந்தது. சிறப்பு விருந்தினராக மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாசரெட்டி, முன்னிலை வகித்து பேசினார். வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் ரகுநாத் தலைமை வகித்து பேசுகையில், ""வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவன விஞ்ஞானி மோகன், உயிர் உரங்களின் முக்கியத்துவம் அதன் உற்பத்தி மற்றும் பயன்பாடு குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.நீலகிரி மாவட்டத்தின் வடக்கு, தெற்கு மற்றும் கூடலூர் மண்டலத்தைச் சார்ந்த வனத்துறை அலுவலர்கள், விவசாயிகள், மரம் வளர்ப்போர் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் 85க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.பயிற்சி பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் உயிர் உரங்கள் அடங்கிய பைகளை வழங்கப்பட்டது. மாவட்ட நீர் மேலாண்மை மேலாளர் சிவராமன் நன்றி கூறினார்.

## சூறாவளியால் வாழை இலை நாசம் மாவட்டத்தில் விவசாயிகள் விரக்தி

ஈரோடு: ஈரோட்டில், சில நாட்களுக்கு முன் சூறாவளி காற்றுடன் பெய்த கனமழையால், வெண்டிபாளையம் பகுதியில் வாழை இலைகள் நாசமானது.
ஈரோடு மாவட்டத்தில், கோபி, பெருந்துறை, பவானி உள்ளிட்ட பல பகுதிகளில், பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் ஏக்கரில் வாழை பயிரிடப்படுகிறது. கதளி, நேந்திரம், ரொபஸ்டிரா, ரஸ்தாளி, மொந்தன், பச்சைநாடன், தேன் வாழை உள்ளிட்ட ரகங்கள் பயிரிடப்படுகின்றன.சில ஆண்டாக மஞ்சள் விலை ஏறுமுகமாகவே இருந்ததால், வாழை மற்றும் கரும்பினை விடுத்து, மஞ்சளை பல விவசாயிகள் பயிரிட்டனர். வாழை உற்பத்தி கணிசமான குறைந்ததால், மார்க்கெட்டில் வாழையின் வரத்து குறைவாக காணப்பட்டது.
இந்நிலையில், நடப்பாண்டு மஞ்சள் விலை எதிர்பார்த்த லாபத்தை தராததால் மஞ்சளை கைவிட்டு, வாழை சாகுபடிக்கு விவசாயிகள் மாறினர். நடப்பாண்டு பயிரிடப்பட்ட வாழைப்பயிர் அறுவடை சீஸன் அனைத்து பகுதிகளிலும், முடிவுக்கு வரும் நிலையை அடைந்தது.
மாவட்டத்தில் பரவலாக நீரோட்டம் இருப்பதால், வாழை சாகுபடியில் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர். அறுவடை முடிந்த பின், இலைக்காக வாழை மரங்களை வளர்ப்பது வழக்கம். கடந்த சில நாட்களுக்கு முன் திடீரென வீசிய சூறாவளிக் காற்றால், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதியில் உள்ள வாழை தோட்டங்கள் நாசமடைந்தது. இதனால் விவசாயிகளுக்கு பல ஆரயிம் ரூபாய் நஷ்டத்தை ஏற்படுத்தி உள்ளது.
இதுகுறித்து வெண்டிபாளையம் விவசாயிகள் கூறியதாவது:
வாழையை விட லாபம் தரும் தொழிலும், இல்லை. நஷ்டப்படுத்தும் தொழிலும் இல்லை. அதிகமான காற்று, மழை, வெயில் என அனைத்துமே வாழைக்கு ஆபத்து தான். சில நாட்களுக்கு முன் வீசிய பலத்த காற்றில், வாழை இலைகள் கிழிந்து பயனற்று போனது. எங்களிடம் வாழை இலை கேட்டு வரும், இலை வியாபாரிகள் அனைவரும் ஏமாற்றத்தோடு திரும்பி செல்கின்றனர். வாழையை பயிரிட்டு,

இயற்கையால் நஷ்டமடைந்த வாழை வியாபாரிகளுக்கு, அரசு நிதியுதவி வழங்க வேண்டும், என்றனர்.

## கோபி பகுதியில் கோழிகளுக்கு பரவும்...மர்மநோய்! மயானமாகும் எல்.பி.பி., வாய்க்கால்

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் கோமாரி நோய்க்கு கால்நடைகள் பலியாகி வரும் நிலையில், மர்மநோய் தாக்குதலால், கறிக்கோழிகளும் இறந்து வருவதால், பண்ணையாளர்கள் பீதியில் உள்ளனர். நோய் தாக்கிய கோழிகளை, பண்ணையாளர்கள் எல்.பி.பி., வாய்க்கால் அருகே அனாதையாக விட்டு செல்கின்றனர்.கோபி சுற்று வட்டார பகுதியில் கால்நடைகள் வளர்ப்போரின் எண்ணிக்கை அதிகளவில் உள்ளது. பனிக்காலத்தில் பசு, எருமைக்கு கோமாரி நோயும், ஆடுகளுக்கு துள்ளுமாரி, ஆட்டுக்கொல்லி நோய் ஏற்படுகிறது. கோபி சுற்று வட்டாரத்தில் நம்பியூர், கோபி, அய்யம்புதூர், கவுந்தபாடி உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் கோமாரி நோயால் இறந்துள்ளது. கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வு முகாம், தடுப்பு நடவடிக்கைகளை, கால்நடைத்துறையினர் சார்பில் மேற்கொள்ளப்பட்டாலும், அந்நோய்க்கு நாட்டு மருந்துகளை உபயோகிப்பதால், பெரும்பாலான கால்நடைகள் இறக்கிறது. கோமாரி நோயின் தாக்குதலால், விவசாயிகள் பலரும் பீதியில் இருந்தனர். இந்நிலையில், கோபி சுற்றுவட்டார பகுதியில், கறிக்கோழிகளுக்கு மர்மநோய் தாக்கி வருவதால், ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிகள் இறந்துள்ளது.

கோபி சுற்று வட்டாரத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட கறிக்கோழி பண்ணைகள் அமைந்துள்ளன. பண்ணைகள் மூலம் கறிக்கோழி மற்றும் முட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. 30 நாள் முதல், 40 நாட்களான கோழிக்குஞ்சுகளுக்கு மர்ம நோய் தாக்கியதால், 2,000க்கும் மேற்பட்ட கோழிகளை, எல்.பி.பி., வாய்க்காலின் ஓரத்திலேயே பண்ணையாளர்கள் விட்டு செல்கின்றனர்.

தகவல் அறிந்த கடுக்கம்பாளையம், கொளப்பலூர் கால்நடை பராமரிப்பு துறை டாக்டர் குழந்தைவேலு, கவுதம் ஆகியோர் நோய் பாதித்த நிலையில்,

அனாதையாக தெருவில் விடப்பட்ட கோழிக்குஞ்சுகளை பார்வையிட்டனர். கொளப்பலூர் டவுன் பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் துப்புரவு தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு, சுற்றி திரிந்த கோழிக்குஞ்சுகளை பிடித்து, குப்பை லாரியில் ஏற்றிச் சென்றனர்.

ஈரோடு கோழி ரத்த மாதிரி பரிசோதனைக்கு பின்பே, கோழிகளுக்கு என்ன நோய் தாக்கியுள்ளது என்ற விவரம் தெரியவரும் என, கால்நடை டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து கறிக்கோழி பண்ணையாளர்கள் கூறியதாவது:

கோபி சுற்றுவட்டார பகுதியில் உள்ள பண்ணைகளில் உள்ள கோழிகள் மர்ம நோயால் பாதிக்கப்பட்டு வருகிறது. கோழி குஞ்சுகளின் இறகுகள் முழுவதும் விழுந்த நிலையிலும், ஆங்காங்கே ரத்த கசிவு ஏற்பட்ட நிலையில் காணப்படுகிறது. சில கோழி குஞ்சுகள் சிறிது நேரம் சோர்வாக காணப்பட்டு, பின் சுருண்டு விழுந்து இறக்கிறது. எனவே, நோயால் பாதிக்கப்பட்ட, 2000க்கும் மேற்பட்ட கோழிக்குஞ்சுகளை, எல்.பி.பி., வாய்க்கால் அருகே உள்ள சாலையோரத்தில், பண்ணையாளர்கள் விட்டு செல்கின்றனர். இறந்த கோழிகளை, எல்.பி.பி., வாய்க்காலில் வீசி செல்கின்றனர், என்றனர்.

## தீவன பற்றாக்குறையை போக்க மாவட்டத்தில் கிடங்குகள் அமைப்பு

ஈரோடு: ஈரோடு மாவட்டத் தில், கால்நடைகளுக்கான ஐந்து தீவன கிடங்குகள் அமைக்கப் பட உள்ளது.

இதுகுறித்து கலெக்டர் சண்முகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

ஈரோடு மாவட்டத்தில், 3.52 லட்சம் கால்நடைகள் உள்ளன. பால் உற்பத்தியை பெருக்க, பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனம் முக்கியமானது. வறட்சி காலத்தில் பசுந்தீவன பற்றாக்குறை ஏற்படும் போது, உலர் தீவனத்தை யே நம்பியே கால்நடை வளர்ப்பவர்கள் உள்ளனர். வெளி ச்சந்தையில் உலர் தீவனம் கிடைக்காத சூழலில், கால்நடைகளுக்கு தீவ ன பற்றாக்குறை ஏற்படுகிறது. கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் உலர் தீவன மையம் அமைக்க அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை, மொடக்குறிச்சி,

பவானி, கோபி, நம்பியூர் பகுதிகளில், ஐந்து உலர்தீவன மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்துக்கு, மாவட்ட கால்நடை பராமரிப்பு துறைக்கு, 50 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு மையத்துக்கும், பத்து லட்சம் வழங்க அரசாணை பெறப்பட்டுள்ளது. ஐந்து பகுதிகளிலும், அந்தந்த கால்நடை மருந்தகங்களில் தீவன மையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

உலர்தீவனம் தேவைப்படும் கால்நடை வளர்ப்போர் தங்களது தேவையை மேற்படி மையங்களில் பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்ய வரும்போது தங்களது குடும்ப அட்டை மற்றும் கால்நடை வைத்திருப்போருக்கான விவரத்தை கட்டாயம் கொண்டு வர வேண்டும். பதிவு செய்யும் கால்நடை வளர்ப்போருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்களது தேவைக்கு ஏற்ப ஒரு கால்நடைக்கு அதிகபட்சமாக, மூன்று கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். ஒவ்வொரு முறையும் ஒரு வார காலத்துக்கு தேவையான அளவு மட்டுமே வழங்கப்படும். ஒருவருக்கு அதிகபட்சமாக ஐந்து கால்நடைகளுக்கு மட்டுமே வழங்கப்படும். இத்தீவனம் சந்தை விலையில் கொள்முதல் செய்யப்பட்டு, கால்நடை வளர்ப்போருக்கு ஒரு கிலோவுக்கு, இரண்டு ரூபாய் என்ற மானிய விலையில் விற்பனை செய்யப்படும். உலர்தீவனமான வைக்கோல், சோளத்தட்டை ஆகியவற்றில் எந்த தீவனம் உடனடியாக கொள்முதல் செய்ய இயலுமோ, அத்தீவனங்கள் மாவட் ட விதைப்பண்ணையிலோ, அண்டை மாவட்டத்தில் உள்ள விதைப்பண்ணைகளிலோ இருந் து கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படும்.

## குமரியில் தொடர் மழை அணைகளுக்கு நீர் வரத்து குறைவு

திற்பரப்பு : குமரியில் தொடர்ந்து மழை நீடித்தும், பேச்சிப்பாறை அணையில் தண்ணீர் வரத்து குறைவாகவே உள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்துவருகிறது. மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் கனமழையும் காணப்பட்டது. இருப்பினும் மாவட்டத்தின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியான பேச்சிப்பாறை அணையில் தண்ணீர் வரத்து குறைவாகவே

உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் அணையின் நீர்மட்டம் 23 அடியாக இருந்தது. பின்னர் தொடர்ந்து மழை பெய்தும் நேற்றைய நிலவரப்படி 26.65 அடியாக இருந்தது. நேற்று முன்தினம் 26.55 அடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டை ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மழை அதிகம் என்பதால், நீர் மட்டமும் அதிகமாகவே உள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் நீர்மட்டம் 17.50 அடியாக இருந்தது. நீர்பிடிப்பு பகுதிகளில் மழையின் அளவு குறைவாக உள்ளதே அணையில் நீர்வரத்து குறைய காரணமாகிறது. நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 91 கன அடி தண்ணீர் உள்வரத்தாக உள்ளது. மழை தொடருமானால், தண்ணீர் வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது. தற்போது, விவசாயத்திற்கு தண்ணீர் திறந்துவிடாத நிலையில், ஷட்டர் பராமரிப்பு பணி நடந்து வருகிறது. மழைக்காலம் துவங்கியதை தொடர்ந்து கடந்த இரண்டு நாட்களுக்கு முன் முதன்மை இன்ஜினியர் குமரி மாவட்ட அணைகளை பார்வையிட்டு சென்றார். இந்நிலையில், நேற்று மாவட்ட கலெக்டர் நாகராஜன் சிற்றாறு பேச்சிப்பாறை அணைகளை பார்வையிட்டார்.

## ஆத்தூர் பகுதியில் தொடர் மழை விவசாயிகள் பொதுமக்கள் மகிழ்ச்சி

ஆத்தூர்: ஆத்தூர் சுற்றுப்பகுதியில் மீண்டும் மழை தொடர்வதால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆத்தூர் பகுதியில் கடந்த சில வாரங்களாக விட்டு விட்டு பெய்த மழை ஓய்ந்து வெயில் வாட்டி எடுத்ததால், பொதுமக்கள் தவித்து வந்தனர். இந்த நிலையில் ஆத்தூர் சுற்றுப்பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் லேசான மழை பெய்தது. இதனால் ஆத்தூர், தெற்குஆத்தூர், கீரனூர், சாகுபுரம் உள்பட ஒரு சில இடங்களில் தரை நனையும் அளவிற்கு தண்ணீர் கிடைத்தது. ஆத்தூரில் இரண்டு நாட்களாக மீண்டும் மாலையிலும், இரவிலும் மழை தொடர்ந்தது. இதற்கிடையில் மீண்டும் ஓய்வெடுத்த மழை தற்பொது ஆத்தூர் பகுதியில் தொடர்வதால், விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## விவசாயிகள் கோரிக்கை

சிவகிரி : சிவகிரி வனப்பகுதி அருகில் மணல் கடத்தல் நடப்பதை தடுத்து நிறுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். சிவகிரிக்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலையடிவாரப்பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த மழையின் காரணமாக மணலானது மலையிலிருந்து அடித்து வரப்பட்டு ஆற்றுப்பகுதிகளில் தேங்கியுள்ளது. குறிப்பாக தொட்டச்சி மலையாற்று பாலத்திற்கு மேற்கே சுமார் 6கி.மீ தொலைவில் மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதியுள்ளது. இப்பகுதியில் உள்ள இராசிங்கபேரி கண்மாயிலிருந்து சிவகிரி வனச்சரகம் கருப்பசாமி கோவில் பீட் பகுதிக்கு செல்லும் வண்டிபாதையில் ஏராளமாக மணல் குவிந்துள்ளது. சுமார் ஒரு கி.மீ தூரத்திற்கு மணலானது குவிந்துள்ள இப்பாதையின் வழியாக தான் வனப்பகுதிக்கு செல்லமுடியும். மேலும் இப்பகுதியில் உள்ள ஏராளமான விவசாயிகள் கரும்பு, நெல் போன்ற பயிர்களை பயிரிட்டுள்ளனர். மேலும் 50 ஏக்கருக்கு மேல் தென்னை, மா, எலுமிச்சை,நெல்லி என பல்வேறு வகையான விவசாயம் செய்து வருகின்றனர். இந்த பாதையின் வழியாக தான் அனைத்து விவசாயிகளும் தங்களுடைய விவசாய நிலங்ளுக்கு சென்று கொண்டு இருக்கின்றனர். மேலும் இந்த பாதை வழியாக தான் வனத்துறை அதிகாரிகளும் தங்களது பகுதிக்கு செல்ல முடியும். இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் சென்று கொண்டு இருக்கின்றனர்.

இப்படி பல்வேறு பணிகளுக்காக தேவைப்படும் இந்த பாதையில் தற்போது மணலால் நிரம்பியுள்ளதால் ஒருசில மணல் திருட்டு தொழில் செய்வோர்கள் இரவு வேளைகளில் மணலை டிராக்டர், லாரிகளில் அள்ளி சென்று விற்பனை செய்கின்றனர். இப்டி இந்த பகுதிகளில் மணல் திருடப்படுவதால் அப்பகுதி முழுவதும் மேடுபள்ளமாக மாறியுள்ளது. மேலும் பல இடங்களில் மோசமான பள்ளமாக மாறியுள்ளது. மேலும் மணல் திருடும் கும்பலால் அந்த பகுதிகளிலுள்ள புஞ்சை கரைகள் உடையும் அளவிற்கு பாழாக்கி இருக்கின்றனர். இதனால் விவசாயிகள் தங்களது விவசாய நிலங்களுக்கு இருசக்கர, நான்கு சக்கர வாகனங்களில் செல்ல முடியாமல் அவதிப்படுகின்றனர். இதுகுறித்து பெரியாவுடையாப்பேரிகுளம் நீர்பாசன விவசாய சங்கத்தின் தொடர்பாளர்ள ஆசிரியர் உலகநாதன் கூறும்போது, இப்பகுதியில் மணல் திருடுபோகிறது. இதுகுறித்த அரசு சம்பந்தமான அனைத்து பிரிவு அதிகாரிகளுக்கு புகார்

கொடுத்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கை எடுக்கவில்லை. குறிப்பாக வனத்துறை, காவல்துறை, வருவாய்துறை அலுவலர்கள் இணைந்த எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மணல் பல இடங்களில் அள்ளப்பட்டு வருகிறது. இதுபோன்ற நிலை நீடித்தால் கிணற்று பாசனம் செய்ய முடியாத நிலையுள்ளது. மேலும் தற்போது காட்டு பன்றிகளின் அட்டக்காசம் தாங்க முடியவில்லை. இப்பகுதியில் விளைவிக்கப்பட்டுள்ள கப்பக்கிழங்கு, கரும்பு போன்றவற்றிற்கு சேதத்தினை உண்டுபண்ணுகிறது. மேலும் சூரியசக்தி மூலம் இயங்கும் சோலார் சரியாக வேலை செய்யாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வனத்துறை தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். மணல் திருடுபோவதை வனத்துறை, வருவாய்துறை காவல்துறை ஆகியன இணைந்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

## தீவன பற்றாக்குறையை சமாளிக்க 4 இடங்களில் விற்பனை மைய வசதி

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு தீவன பற்றாக்குறையை சமாளிக்க 4 இடங்களில் விற்பனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.நெல்லை மாவட்டத்தில் 3.54 லட்சம் கால்நடைகள் உள்ளன. பசுந்தீவன பற்றாக்குறையை சமாளிக்க கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் உலர் தீவன விற்பனை மையம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. மாவட்டத்தில் ராதாபுரம், மானூர், மேலநீலிதநல்லூர் மற்றும் குருவிகுளம் பகுதிகளில் விற்பனை மையங்கள் அமைக்க கலெக்டர் தலைமையின் கீழ் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக மாவட்ட கால்நடை பராமரிப்பு துறைகஅகு 40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு மையத்திற்கும் தலா 10 ல்டசம் ஒதுக்கப்பட்டுள்ளது. இம்மையங்களில் ஒரு கால்நடைக்கு அதிகபட்சமாக 3 கிலோ உலர் தீவனம் வழங்கப்படும். கால்நடை வளர்ப்போர் உரிய விபரங்களை கொண்டு வர வேண்டும். கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி வறட்சி காலத்தில் கால்நடைகளை பாதுகாத்து மாவட்டத்தில் பால் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கலெக்டர் கருணாகரன் தெரிவித்தார்.

## வறண்டு வரும் தாமிபரணி பாசன நிலங்கள்: ரூ.282 கோடியில் 4வது குழாய் வழி திட்டம்

திருநெல்வேலி : மருதூர் அணையில் இருந்து 282 கோடியில் தண்ணீர் எடுக்கும் திட்டத்திற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். திருவைகுண்டம் அணையில் இருந்து தூத்துக்குடி தொழிற்சாலைகளுக்கு 20 மில்லியன் காலன் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டம் 1971ம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால் இதில் விவசாயிகளுக்கு அரசு அளித்த உறுதிமொழிகள் மீறப்பட்டு 15 ஆண்டுகளாக பாசன நிலங்கள் தண்ணீர் உரிமையை இழந்துள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிபரணி பாசன இரு போக சுமார் 41 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஒரு போக நிலங்களாக மாற்றப்பட்டன. கடந்த 2008ம் ஆண்டு இத்திட்டத்தை 23 மில்லியன் என உயர்த்தி திருவைகுண்டம் அணையில் இருந்து ராட்சத குழாய் வழி திட்டம் 28 கோடியில் கொண்டு வரப்பட்டது. ஆனால் அடுத்த ஆண்டிலேயே இந்த அணை வறண்டது. இந்நிலையில் தற்போது ஜப்பான் நாட்டு உதவியுடன் 282 கோடியில் மருதூர் அணையில் இருந்து தினமும் சுமார் 10 கோடி லிட்டர் தண்ணீர் எடுக்கும் 4வது குழாய் வழி திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் 3 ஆண்டுகளில் ஒரு போக நிலங்களிலும் விளைச்சல் ஏதும் இல்லாமல் வறண்டு விடும் நிலை உள்ளது.சீவலப்பேரியில் 11 கோடியில் தாமிரபரணி ஆற்றில் ஒரு மீட்டர் உயரத்தில் 365 மீட்டர் நீளம் புதிய தடுப்பணை கட்டப்படுகிறது. ஏற்கனவே இங்கு தனியார் குடிநீர் நிறுவனம் 32 ஆழ்துழாய் உறை கிணறுகளை அமைத்துள்ள நிலையில் இத்தடுப்பணை வெளிநாட்டு குடிநீர் வணிக நிறுவனத்திற்கே பயன்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து பா.ம.க மாநில துணை பொது செயலாளர் வியனரசு கூறும் போது, ""தாமிரபரணி பாசனம், குடிநீர் திட்டங்கள் குறித்து முழுமையாக ஆய்வு நடத்த நீர்ப்பாசன வல்லுனர்களை கொண்ட சிறப்பு ஆய்வு குழு அமைக்க வேண்டும். இதன் அடிப்படையில் வேளாண்மைக்கு முதன்மையிடம் வழங்கும் வகையில் திட்டங்களை தீட்டி செயல்படுத்த வேண்டும்.இக்கோரிக்கைகளை வலியுறுத்தி 7ம் தேதி

திருவைகுண்டத்தில் பட்டினி போராட்டம் நடத்தப்படும்" என்றார். இதில் நிர்வாகிகள் நந்தகுமார், அரிகரன், கிருஷ்ணன், பத்மனாபன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பண்ணைக் குட்டைகள் ஆர்வமில்லா விவசாயிகள்

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் பகுதி கிராமங்களில், போதிய மழை பெய்யாததால், பண்ணைக்குட்டைகள் அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. மழைநீரை சேமிக்கும் வகையில், நீர்வள நிலவள திட்டத்தில் கீழ் 7 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பில் 12, நூறு நாள் வேலைத்திட்டத்தின்கீழ் 8 லட்ச ரூபாய் மதிப்பில், 16 பண்ணைக் குட்டைகள் அமைக்கபட்டு வருகிறது. முதுகுளத்தூர் தாலுகாவில் 207 கிராமங்கள் இருந்தும், பருவமழை பொய்ப்பால், பண்ணை குட்டைகளை அமைக்க, விவசாயி

களிடம் ஆர்வமில்லை.

காக்கூர் ஊராட்சி தலைவர் போஸ் கூறியதவாது: தரிசு நிலங்களில், 30 மீட்டர் நீள, அகலத்துடன், 7 அடி ஆழத்தில் பண்ணைக் குட்டைகள், வேளாண் பொறியியல் துறை சார்பில் அமைத்து தரப்படுகிறது. சில ஆண்டுகளாக பருவமழை பொய்ப்பால், 500 ஏக்கர் பரப்பளவில், விவசாய நிலங்கள் இருந்தும், ஆறு பண்ணைக்குட்டைகளை மட்டுமே அமைக்க, காக்கூர் பகுதி விவசாயிகள் முன்வந்துள்ளனர். ஐந்து ஏக்கர் நிலம் கொண்ட விவசாயிகளிடம் கட்டாயம் பண்ணை குட்டைகள் அமைக்க, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்,"என்றார்.

### போலி உரங்களை கண்டுபிடிப்பது எப்படி விவசாயிகளுக்கு வேளாண்துறை யோசனை

திண்டுக்கல் :அரசு அனுமதி பெற்ற கடைகளில் உரமூடைகளை வாங்கும்போது அதில் இரண்டாவது தையல் இடம்பெற்றிருந்தால் போலி என்பதை அறிந்து கொண்டு தகவல் தெரிவிக்குமாறு விவசாயிகளுக்கு, வேளாண் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் 50 கிலோ உரமூடைகள்

ரகவாரியாக ரூ. 800 லிருந்து ஆயிரத்து 500 வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூடையில் அச்சிடப்பட்டுள்ள எம்.ஆர்.பி., விலையிலேயே உரங்கள் விற்கப்படவேண்டும். விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி மற்றும் மூடையின் விலை விபரம் பில்லில் இடம்பெற்றுள்ளதா என்பதை சரிபார்த்து வாங்கவேண்டும். இந்த பில்லை ஆதாரமாக வைத்துதான் சம்பந்தப்பட்ட கடையில் விற்கப்பட்ட உரமூடைகள் போலியாக இருந்தால் வேளாண்துறையினரால் நடவடிக்கை எடுக்கமுடியும்.

கலப்பட உரங்களை ஒரிஜினல் மூடைகளில் கலப்பவர்கள் ஏற்கனவே உள்ள தையலை பிரித்துவிட்டு அதில் உள்ள உரத்தை வெளியே எடுத்த பின் கலப்பட உரத்தை உள்ளே வைத்து மிஷினில் சாக்கை தைத்திருப்பர். எனவே, உரமூடைகளில் இரண்டாவது தையல் இடம்பெற்றுள்ளதா என்பதை விவசாயிகள் சரிபார்த்து வாங்க வேண்டும்.

சந்தேகம், குழப்பம் இருந்தால் தயங்காமல் வேளாண் துறை அலுவலகத்தில் தகவல் தெரிவிக்கலாம், என வேளாண்மைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு சிறப்பு திட்டம் அமல்படுத்த ஆலோசனை

திண்டுக்கல் : விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டங்கள் குறித்து, வேளாண் துறை உயர் அதிகாரிகள் ஆலோசனை நடத்தி தேர்வு செய்ய உள்ளனர்.

தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக "விஷன் 2023' என்ற திட்டம் அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயியும், சாகுபடி செய்யும் பயிரினால் உயர் விளைச்சலை பெற்று, இரட்டிப்புவருவாயை ஈட்டி வாழ்க்கையில்தன்னிறைவுடன் திகழ வேண்டும்என்பதே இத்திட்டத்தின் நோக்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.இதனை செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு கிராமங்களிலும் விவசாயம் சார்ந்த உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்க அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மையை மையமாகக்கொண்ட தொழிற்சாலைகள், நிறுவனங்களை துவக்குவதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.எந்தெந்த மாவட்டங்களுக்கு, என்னென்ன திட்டங்கள் என்பதை இறுதிசெய்வதற்காக கோயம்புத்தூரில் நடந்த சிறப்பு ஆலோசனை கூட்டத்தில், பல்வேறு மாவட்டங்களில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள 12 துணை இயக்குனர்கள்(வேளாண் மற்றும் வணிகம்) பங்கேற்றனர். இவர்களின்

கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அரசுக்கு அறிக்கை அளிக்கப்பட உள்ளது.

### கோமாரியால் இறந்த ஆடு, மாடுகளுக்கு...நிவாரணம்! கோரிக்கைக்காக விவசாயிகள் வெளிநடப்பு

தஞ்சாவூர்: டெல்டா மாவட்டங்களில், கோமாரி நோய் தாக்கி இறந்த மாட்டுக்கு, 30 ஆயிரம் ரூபாய், ஆட்டுக்கு, மூவாயிரம் ரூபாய் வீதம், விவசாயிக்கு நிவாரண தொகையை அரசு வழங்க வலியுறுத்தி, குறைதீர்க்கூட்டத்தில் இருந்து விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர்.தஞ்சை கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கூட்டம், கலெக்டர் சுப்பையன் தலைமையில் நேற்று நடந்தது. காலை, 10.10 மணிக்கு கூட்டம் துவங்கியதும், வேளாண்துறை அறிக்கையை டி.ஆர்.ஓ., சுரேஷ்குமார் வாசிக்க துவங்கினார். அப்போது, தஞ்சை மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க தலைவர் சுகுமாரன் தலைமையில், மாவட்ட செயலாளர் சக்திவேல், பொருளாளர் மோகன், ஒன்றிய செயலாளர் அகிலன் மற்றும் கலியபெருமாள், வைத்திலிங்கம், சின்னத்துரை, கர்ணன் உள்பட, 15க்கும் மேற்பட்டோர், கலெக்டரை முற்றுகையிட்டு தரையில் அமர்ந்தனர். பின், கோமாரி நோய் தாக்குதலை தடுக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனக்கூறி கண்டன கோஷம் எழுப்பினர்.

அப்போது விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்ட தலைவர் சுகுமாரன் கூறியதாவது: தஞ்சை, திருவாரூர், நாகை உள்பட டெல்டா மாவட்டங்களில் கடந்த, ஒரு மாதத்தில் பல்லாயிரக்கணக்கான கால்நடைகள் கோமாரி நோய் தாக்கி இறந்துள்ளன. வழக்கமாக, பருவமழை துவங்கும் காலத்தில் தான் கோமாரி நோய் தாக்கும். இதை கருத்தில் கொண்டு, தடுப்பூசி பணி முடுக்கி விடப்படும்.

ஆனால் நடப்பாண்டு கால்நடைத்துறை அதிகாரிகள் மெத்தன போக்கால், போதிய அளவு கால்நடைக்கு தடுப்பூசி போடப்படவில்லை. அதனால் அதிகளவு கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இந்நிலையில் வருவாய்த்துறையினரை கொண்டு முறைப்படி கணக்கெடுத்து, கோமாரி நோய் பாதிப்பில் இறந்த கால்நடைகள் விபரத்தை வெளியிட வேண்டும். தஞ்சை மாவட்டம் முழுவதும் இதுவரை, ஐந்தாயிரம் மாடுகள், 10 ஆயிரம் ஆடுகள் நோய் தாக்கி பலியாகியுள்ளன. இறந்த மாட்டுக்கு தலா, 30 ஆயிரம் ரூபாயும், ஆட்டுக்கு, மூவாயிரம் ரூபாயும்

உரிமையாளரிடம் நிவாரண தொகையாக அரசு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போதிய நடவடிக்கையை எடுக்காததை கண்டித்து, கூட்டத்தை புறக்கணித்து வெளிநடப்பு செய்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார். இதையடுத்து கூட்டத்தில் இருந்து விவசாயிகள் வெளிநடப்பு செய்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து தஞ்சை ராயமுண்டான்பட்டி விவசாயி ஜீவக்குமார் குறைதீர் கூட்டத்தில் பேசுகையில், ""கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் புதிய உறுப்பினருக்கு சாகுபடி கடன் வழங்கப்படவில்லை. இதை வழங்க வேண்டும். மத்திய கூட்டுறவு வங்கியில் மத்திய காலக்கடன் அறிவித்தும், விவசாயிகளுக்கு வழங்க ஜாமீன்தாரர் கேட்டு, அதிகாரிகள் கெடுபிடி செய்கின்றனர். அதை தடுக்க வேண்டும்," என்றார். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சில் தலைவர் சவரிமுத்து, கரும்பு விவசாயிகள் சங்க செயலாளர் கோவிந்தராஜன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க தஞ்சை மாவட்டக்குழு தலைவர் பாலசுந்தரம், காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் ரவிச்சந்தர், வெண்டாக்கோட்டை படுக்கை அணை பாசன விவசாயிகள் சங்க தலைவர் வீரசேனன், பாசனதாரர் சங்கத்தலைவர் தங்கவேல் உள்பட பலர் குறைதீர் கூட்டத்தில் பேசினர்.பின் கலெக்டர் சுப்பையன் பேசுகையில், ""தஞ்சை மாவட்டத்துக்கு அருகிலுள்ள மாவட்டத்திலிருந்து கோமாரி நோய் பரவிய நிலையில், எல்லையில் போதிய தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கால்நடைகளுக்கு போதிய சிகிச்சை அளித்து, நோய் பாதிப்பில் இருந்து காப்பாற்றப்பட்டுள்ளது. தற்போது, கோமாரி நோய் கட்டுப்பாட்டில் உள்ளது," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.11.2013**

***மீன் வளர்ப்போரின் குளங்களை சீரமைக்க மானிய உதவிதொகை***

வளத்துறையின்கீழ் இயங்கும், காரைக்கால் மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சார்பில், காரைக்கால் மாவட்டத்தை சேர்ந்த மீன் வளர்ப்பு விவசாயிகளுக்கு, குளங்களை சீரமைக்கவும், ஆழப்படுத்தி மீன்களை வளர்க்கவும் மானிய உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி காரைக்காலில் நடந்தது. கலெக்டர் அசோக்குமார் தலைமை தாங்கினார். மீன் வளர்ப்போர் மேம்பாடு முகமை முதன்மை நிர்வாக அதிகாரி சம்பத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.
தொடர்ந்து, மீன் வளர்ப்பு குளங்களை சீரமைக்க, 7 பயனாளிகளுக்கு ரூ.1.50 லட்சத்தை மானியமாக வழங்கினார்.
இது குறித்து, மீன் வளர்ப்போர் மேம்பாடு முகமை முதன்மை நிர்வாக அதிகாரி சம்பத் கூறியதாவது:
கடந்த 24 ஆண்டுகளாக மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. உள்ளூரில் மீன் வளர்ப்பை அதிகரிக்கவும், உள்ளூர் மக்களுக்கு புரதச்சத்தான மீன் அதிகளவில் கிடைக்கவும் தனி கவனம் செலுத்தி வருகிறோம். அதன் ஒரு பகுதியாக, காரைக்கால் மாவட்டத்தில் ஓடும் ஆறுகளில் 11 லட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளது. விரைவில், ஒரு லட்சம் மீன் குஞ்சுகளை காரைக்கால் கடல் மற்றும் ஆறுகளில் விட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், உள் நாட்டு மீனவர்கள் நலன் கருதி, ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு, கொடுவா, கடல் விரால், நன்னீர் இறால், நண்டு வளர்ப்பு குறித்த சிறப்பு பயிற்சிகளை வழங்கி வருகிறோம். இது தவிர, மீன் வளர்ப்போர் புதிய குளம் அமைக்க ஹெக்டேருக்கு ரூ.60 ஆயிரமும், குளங்களை சீரமைத்தல் பணிக்கு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரமும் மானியமாக வழங்கப்படுகிறது என்றார்.

**கோமாரி நோயை தடுக்க கால்நடைகளுக்கு தடுப்பூசி**

ஈரோடு, : கோமாரி நோயில் இருந்து கால்நடைகளை காக்க தொடர்ந்து தடுப்பூசி போட வேண்டுமென மாவட்ட கலெக்டர் வலியுறுத்தி உள்ளார்.
ஈரோடு மாவட்ட கலெக்டர் சண்முகம் விடுத்துள்ள செய்தி குறிப்பு விவரம்:
ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள கோமாரி நோய் தாக்கத்தை

கட்டுப்படுத்த விவசாயிகள் நோய் தாக்கிய தங்கள் கால்நடைகளை உடனடியாக தனிமைப்படுத்தி வைத்து கால்நடை மருத்துவர்களுக்கு தகவல் அளிக்க வேண்டும். நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாய் மற்றும் கால்களை ஒரு சதவீதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலை கொண்டு நன்றாக கழுவ வேண்டும். நாக்கில் போரிக் ஆசிட் கிளிசரின் கலவையை தடவ வேண்டும். கால் குளம்புகளில் வேப்பெண்ணெயை தடவவேண்டும்.

விவசாயிகள் நோயுற்ற மாடுகளை மேய்ச்சலுக்கு கண்டிப்பாக அனுப்ப கூடாது. புதியதாக மாடுகளை வாங்கவோ, விற்க கூடாது. பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கேழ்வரகு கஞ்சியுடன் தேன் கலந்து கொடுக்க வேண்டும். நோய் தாக்கி இறக்கும் கால்நடைகளை கால்நடை மருத்துவர் மூலம் பரிசோதனை செய்த பின்பு 6 அடிக்கு குழி தோண்டி அதில் சுண்ணாம்பு பவுடர் தூவி புதைக்க வேண்டும். நோயுற்ற கால்நடைகளுக்கு பயன்படுத்திய தீவனத்தட்டு, பசுந்தீவனத்தினை அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும். மேலும் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை குறித்து விபரங்களை அறிந்து கொள்ள கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையை 0424-2257512 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

விவசாயிகள் கோமாரிநோய் கிளர்ச்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் தடுப்பூசி போடுவதை தவிர்த்து நோய் பாதிப்பு இல்லாத இடங்களில் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். 4 மாத கன்று முதல் சினை மாடுகளுக்கும் உடனடியாக கால்நடை மருத்துவர் மூலமாக தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

முதன் முறையாக தடுப்பூசி போடும் கன்றுகளுக்கு 3 வாரங்கள் கழித்தும், வளர்ந்த கால்நடைகளுக்கு 6 மாதங்கள் கழித்தும் பின்னர் தொடர்ச்சியாக தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தொடர்ந்து உரிய தடுப்பூசிகளை போட்டுக் கொண்டால் மட்டுமே கோமாரி நோயை தடுக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

**யானையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு**

சங்கராபுரம், : சங்கராபுரம் வட்டத்திற்குட்பட்ட கல்வராயன்மலை பகுதி அடிவார கிராமங்களான புளியங்கோட்டை, லக்கிநாயக்கன்பட்டி, ரங்கப்பனூர், புதுப்பட்டு, மோட்டம்பட்டி, தும்பை, பாச்சேரி, கொசப்பாடி ஆகிய கிராமங்களில் காட்டு யானைகள் திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலைப்பகுதியிருந்து வழி தவறி குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்துள்ளது. இதனால் விவசாயிகளின் நெல், கரும்பு, வாழை போன்றவைகளை மிதித்து நாசம் செய்ததுடன், வழியில் வரும் விவசாயி ஒருவரையும், ஆடு, மாடுகளையும் மிதித்து கொன்றுள்ளது. இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.
தற்போது வறட்சியான காலக்கட்டத்தில் குடிநீர் மற்றும் இயற்கை தேவைகளுக்காக வனப்பகுதியில் இருந்து குடியிருப்பிற்கும், விவசாய நிலங்களிலும் பெருவாரியான இடங்களில் தமிழகம் முழுவதும் யானைகள் இறங்கி பெருத்த நஷ்டமும், உயிர்சேதமும், கால்நடை அழிப்பும் செய்துள்ளது. விழுப்புரம் மாவட்டத்தில் கல்வராயன் மலை பகுதியில் யானைகள் விவசாயிகளின் விளைச்சல் பகுதியில் புகுந்து பெருத்த நாசம் செய்வதால் இதற்கான உரிய இழப்பீடு இல்லாமலும், விவசாயிகள் பெரும் மன உளைச்சலும், பெரும் நஷ்டமும் ஏற்பட்டு மிகுந்த கஷ்டத்தில் உள்ளனர். ஆகவே வனத்துறை மற்றும் வருவாய்த்துறை மூலம் காட்டு யானைகளால் ஏற்பட்ட சேதம் அடைந்த பயிர்கள் மற்றும் கால்நடைகளை ஆய்வுசெய்து விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சங்கராபுரம் வட்டக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி சங்கராபுரம் வட்ட செயலாளர் சுப்பிரமணியன் தமிழக முதல்வர் மற்றும் மாவட்ட ஆட்சியருக்கு இழப்பீடு கோரி மனுக்கள் அனுப்பியுள்ளார்.

## காய்கறிகள் அழுகாமல் பாதுகாக்க காந்தி மார்க்கெட்டில் குளிர்சாதன கிடங்கு சில்லரை வியாபாரிகள் சங்கம் வலியுறுத்தல்

திருச்சி, : காய்கறி களை அழுகாமல் பாது காக்க திருச்சி காந்தி மார்க்கெட்டில் குளிர்சாதன கிட ங்கு அமைக்க வேண்டுமென சில்லரை வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் வலியுறுத்தியது.


திருச்சி காந்தி மார்க் கெட் அனைத்து காய்கறி சில்லரை வியாபாரிகள் முன்னேற்ற சங்க செயற்குழு கூட்டம் நடந்தது. சங்க தலைவர் கமலகண்ணன், செயலாளர் மந்தை ஜெகன் ஆகியோர் தலைமை வகித்தனர். பக்கீர்வரிசை பாலசுப்ரமணியன், கயிலை முருகானந்தம் முன்னிலை வகித்தனர்.

காந்தி மார்க்கெட்டில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் சிறு வியாபாரிகள் அதிகளவில் இருப்பதால் இப்பகுதியில் அம்மா உணவகம் அமைக்க வேண்டும். வணிகநல வாரி யத்தை தமிழக அரசு சிறுவியாபாரிகள் பயன்பெறும் வகையில் சீரமைத்துதர வேண்டும். உணவு தர பாது காப்பு சட்டத்தை மத்திய அரசு கைவிட வேண்டும். காய்கறி வியாபாரிகள் பயன்பெறும் வகையில் காய்கறிகள் அழுகாமல் இருக்க குளிர்சாதன கிடங்கு மாநகராட்சி மூலம் அமைத்துதர வேண்டும். 24 மணி நேரம் இயங்கும் காந்தி மார்க்கெட் பகுதியில் உள்ள எரியாமல் உள்ள மின்விளக்குகளை சரி செய்ய வேண் டும்.

மார்க்கெட் பகுதியில் உள்ள கட்டண கழிப்பிட த்தை பொதுகழிப்பிடமாக மாற்ற வேண்டும். காந்தி மார்க்கெட் பகுதியில் சுற்றி த்திரியும் மாடுகளை மாநகராட்சி அதிகாரிகள் பிடித்து அப்புறப்படுத்தவில்லை என்றால் ஜனவரி 8ம் தேதி மாநில தலைவர் வெள்ளை யன் தலைமையில் மார்க்கெட்டில் உள்ள அனைத்து கேட்டுகளுக்கும் பூட்டு போடும் போராட்டம் நடத்தப்படும் உள்ளிட்ட பல் வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பொருளாளர் சுதாகர், பாபு, பாலு, வீரப்பன், சந் துரு, பாண்டியன், அழகுமுருகன், ரகோத்தமன், கணே சன், பிரகாஷ், சிவகுருநா தன், அர்ஷாத், மூர்த்தி, மதுபாலன், விஜி, தாஜூதீன், சதீஷ்கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**கோவையில் டிசம்பர் 14,15ல் வாழைப்பழ திருவிழா**



சென்னை: இந்திய தொழில் கூட்டமைப்பின் விவசாயம், உணவு பதப்படுத்துதல் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தியாகராஜன், வாழைப்பழ திருவிழா சேர்மன் ரவிச்சந்திரன், தமிழ்நாடு வாழைப்பழ உற்பத்தியாளர் கூட்டமைப்பு தலைவர் கருப்பையா ஆகியோர் சென்னையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: வாழைப்பழ உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு வாழைப்பழ திருவிழா டிசம்பர் 14 மற்றும் 15ம்தேதிகளில் கோவையில் கொடிசியா அரங்கில் நடைபெற உள்ளது. வாழைப்பழ அறுவடைக்கு பின்பு சேதாரம் இல்லாமல் விற்பனைக்கு கொண்டு செல்வதற்கு சில வழிமுறைகள் உள்ளன.

அதுபற்றி விவசாயிகளுக்கு விளக்கும் வகையில் கருத்தரங்கு நடைபெற உள்ளது. மேலும் இந்தியாவில் விளையக்கூடிய 35 வகையான வாழைப்பழங்கள் கண்காட்சியில் இடம்பெறுகிறது. உலக அளவிலான வாழைப்பழ உற்பத்தியில் தமிழகத்தில் மட்டும் 30 சதவீதம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**28.11.2013**

**மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்கலாம்**



விருதுநகர்,

நீர்வள நிலவள திட்டத் தின் கீழ் மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம். இது குறித்து விருதுநகர் மீன் வள உதவி இயக்குனர் விடுத் துள்ள ஒரு செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

**நீர்வள நிலவள திட்டம்**

விருதுநகர் மாவட்டத்தில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் மண் குட்டையில் மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணை அமைக்கும் திட்டத்தில் (ரூ.2.5 லட்சம் மதிப்பீட்டில் கட்டுமா னம், ரூ.45 ஆயிரம் மதிப்பில் உள்ளீட்டு செலவினம்) அர் ஜூனா உபவடி நிலப்பகுதி யில் ஒரு பயனாளி தேர்வுசெய் யப்பட உள்ளார். பயனாளியி டம் 1½ ஏக்கர் நிலமும், போது மான நீர் வசதி உள்ள கிணறு அல்லது ஆழ்துளை கிணறும், மின் இணைப்பும், மோட்டார் பம்பு செட்டும் இருக்க வேண் டும். ஆர்வமுள்ள விவசாயிகள் விருதுநகர் மீன் வள உதவிஇயக் குனர் அலுவலகத்தை நிலஆவ ணங்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம். மேலும் விவரங்களுக்கு, மீன் வள உதவி இயக்குனர் அலுவல கம், 286, ராஜா மணி ஹால், பழைய அருப்புக்கோட்டை ரோடு, விருதுநகர் என்ற முகவ ரியிலோ அல்லது 04562-244 707 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.இவ் வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

**4 இடங்களில் கால்நடை தீவன கிட்டங்கிகள் அமைப்பு**



நெல்லை,

நெல்லை மாவட்டத்தில் கால்நடை தீவன பற்றாக்குறையை போக்க தீவன கிட்டங்கிகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் கருணாகரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

<u>தீவன விற்பனை மையம்</u>

நெல்லை மாவட்டத்தில் 3.54 லட்சம் கால்நடைகள் உள்ளன. இவைகள் மூலம் மாவட்ட தேவைக்கான பால் உற்பத்தியை பெருக்குவதற்கு பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனம் இன்றியமையாதது. வறட்சி காலத்தில் பசுந்தீவனம் பற்றாக்குறை ஏற்படும் போது கால்நடை வளர்ப்போர் உலர் தீவனத்தையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. உலர் தீவனம் வெளிச்சந்தையில் அதிகம் கிடைக்காத சூழ்நிலையில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அதனை சரிகட்ட கால்நடை பராமரிப்பு துறையின் மூலமாக உலர் தீவன விற்பனை மையம் அமைக்க தமிழக அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக நெல்லை மாவட்டத்தில் ராதாபுரம், மானூர், மேலநீலிதநல்லூர் மற்றும் குருவிகுளம் ஆகிய பகுதிகளில் தீவன விற்பனை மையங்கள் அமைக்க மாவட்ட கலெக்டரின் கீழ் குழு உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென நெல்லை மாவட்ட கால்நடை பராமரிப்பு துறைக்கு ரூ.40 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு மையத்திற்கும் ரூ.10 லட்சம் வழங்க அரசாணை பெறப்பட்டுள்ளது. ராதாபுரம் பகுதியில் ராதாபுரம் கால்நடை மருந்தகம், மானூர் பகுதியில் மானூர் கால்நடை மருந்தகம், மேலநீலிதநல்லூர்

பகுதியில் மேலநீலிதநல்லூர் கால்நடை மருந்தகம், குருவிகுளம் பகுதியில் குருவிகுளம் கால்நடை மருந்தகத்திலும் உலர் தீவன மையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மானிய விலையில் விற்பனை

உலர்தீவனம் தேவைப்படும் கால்நடை வளர்ப்போர் தங்களது தேவையை மேற்படி மையங்களில் வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும். பதிவு செய்ய வரும் போது தங்களது குடும்ப அட்டை மற்றும் கால்நடை வைத்து இருப்பதற்கான விவரத்தை கட்டாயம் கொண்டு வர வேண்டும். பதிவு செய்யும் கால்நடை வளர்ப்போருக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்களது தேவைக்கேற்ப ஒரு கால்நடைக்கு அதிக பட்சமாக 3 கிலோ உலர்தீவனம் வழங்கப்படும்.

ஒருவருக்கு அதிகபட்சமாக 5 கால்நடைகளுக்கு மட்டுமே வழங்கப்படும். இத்தீவனம் சந்தை விலையில் கொள்முதல் செய்யப்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு ஒரு கிலோவிற்கு ரூ.2 என மானிய விலையில் விற்பனை செய்யப்படும். உலர் தீவனமான வைக்கோல் மற்றும் சோளத்தட்டை ஆகியவற்றில் எந்த தீவனம் உடனடியாக கொள்முதல் செய்ய இயலுமோ அத்தீவனங்கள் மாவட்ட விதைப்பண்ணையிலோ அல்லது அண்டை மாவட்டத்தில் உள்ள விதை பண்ணைகளிலோ இருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படும்.

பால் உற்பத்தி

கால்நடை வளர்ப்போர் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு தீவனம் பற்றாக்குறை ஏற்படும் வறட்சி காலத்திலும் தங்களது கால்நடைகளை பேணி பாதுகாத்து மாவட்டத்தினுடைய பால் உற்பத்தியை பெருக்க உறுதுணையாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில், கலெக்டர் கருணாகரன் கூறியுள்ளார்.

## சிறுபாக்கம் பகுதியில் மழை இல்லாததால் 30-க்கும் மேற்பட்ட ஏரிகள் வறண்டு கிடக்கும் அவலம்

சிறுபாக்கம்,

சிறுபாக்கம் பகுதியில் போதிய அளவில் இது வரையில் பருவமழை பெய்யாத காரணத்தினால் 30-க்கும்மேற்பட்ட ஏரிகள் வறண்டு கிடக்கும் நிலையில் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## விவசாய பகுதி

கடலூர் மாவட்டம் கடைகோடி பகுதியில் அமைந்துள்ளது சிறுபாக்கம். இப்பகுதி மக்கள் விவசாயத்தையே சார்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நீர் ஆதாரமாக வள்ளிமதுரம், ஒரங்கூர், நறையூர், ரெட்டாக்குறிச்சி, சிறுபாக்கம், ஜாயேந்தல், காஞ்சிராங்குளம், பொயனப்பாடி உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஏரிகள் அமைந்துள்ளது.

இதன் வயிலாக கிராமங்கள் தோறும் ஆயிரம் முதல் 3 ஆயிரம் ஏக்கர் வரையில் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதில் கரும்பு, மணிலா, நெல் ஆகிய பயிர்கள் பயிரிடப்படுவது வழக்கமாகும்.

## கேள்விக்குறியாகும் விவசாயம்

கடந்த சில ஆண்டுகளாகவே இப்பகுதியில் பருவமழை பொய்த்து போனதால் விவசாயமே கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது பருவமழை காலம் தொடங்கி பாதி நாட்கள் கடந்து விட்டது. ஆயினும் போதிய அளவில் மழைப்பொழிவு இல்லாத காரணத்தினால் இதுவரையில் எந்த ஒரு ஏரியும் நிரம்பாத நிலையில் காணப்பட்டு வருகிறது. ஒருசில ஏரிகளில் மட்டும் கரையோர பகுதியில் உள்ள பள்ளங்களில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கி நிற்கிறது.

## வானம் பார்த்த பூமி

பருவமழை காலத்திற்கு இன்னும் ஒரு மாதம் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில், மழை பொழிவு இருக்குமா? அல்லது இந்த ஆண்டும் கடந்த காலத்தை போன்றே மழை கண்ணாமூச்சி ஆடி சென்றுவிடுமா என்கிற சோகத்தில் விவசாயிகள் உள்ளனர்.

ஏனெனில் வானம்பார்த்த பூமியான இங்கு ஏரிகள், கிணற்று பாசனம் மூலமே விவசாயிகள் பாசனப்பணி மேற்கொண்டு வருகின்றனர். எனவே நீர் ஆதாரமான ஏரியே வறண்டு போனால், கிணற்றில் தண்ணீர் பெருகுவது என்பது கடினமான

ஒன்றாகும். எனவே இப்பகுதி விவசாயிகள் ஆழ்ந்த சோகத்தில் மூழ்கி உள்ளனர். எனவே இவர்களின் எதிர்பார்ப்பை வருணபகவான் நிறைவேற்றுவாரா?

**திண்டிவனம் பகுதியில் காட்டுப்பன்றிகளால் பயிர்கள் நாசம் 25 கிராம விவசாயிகள் வேதனை**



திண்டிவனம்,

திண்டிவனம் பகுதியில் பல ஏக்கர் விவசாய விளை பயிர்களை காட்டுப் பன்றிகள் நாசம் செய்து வரு கிறது. இதனால் 25 கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

<u>**காட்டுப்பன்றிகள் கூட்டம்**</u>

திண்டிவனம் பகுதியை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த மக்கள் விவசாயத்தை முதன்மை தொழிலாக செய்து வருகின்றனர். இதற்காக விவசாயிகள் இரவு, பகலாக விளைநிலங்களில் வியர்வை சிந்தி பாடுபட்டு உழைக்கின் றனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக காட்டுபன்றி களின் தொல்லை அதிகமாக இருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். திண்டிவனம், மயிலம், கொரளூர், ரெட் டணை, முப்புளி, அவ்வையார் குப்பம், நாரேரிக்குப்பம், பெரமண்டூர், ஆலகிராமம், கோபாலபுரம், பெரப்பந்தாங் கல், முட்டியூர், தென்புத்தூர், கொங்கரப்பட்டு, வெங்கந்தூர், செண்டியம்பாக்கம், பேரணி, வல்லம் மற்றும் அதை சுற்றி யுள்ள 25 கிராமங்களில் விவ சாய பயிர்களை காட்டுப்பன்றி கள் கூட்டம் நாசம் செய்கின் றன.

**<u>இரவில் நாசமாக்கும்</u>**

இரவு சூழ்ந்ததும் பன்றிகள் கூட்டம், கூட்டமாக விவசாய விளை நிலங்களுக்குள் புகுந்து விடுகின்றன. அங்கு தங்களது கண்களில் தென்படும் நெல், கம்பு, மணிலா, சவுக்கை, சோளம் மற்றும் அனைத்து வகையான காய்கறிகளை உணவாக உட்கொள்கிறது. பின்னர் வயிறு நிறைந்தவுடன் பன்றிகள் விளையாடி அங்குள்ள பயிர்களை நாசம் செய்கின்றன. இரவு முழுவதும் விவசாய பயிர்களை வேட்டை யாடும் பன்றிகளை பகலில் காணமுடியாது.

விடிந்தவுடன் விவசாய நிலங்களுக்கு செல் லும் விவசாயிகள் விவசாய பயிர்கள் சேதம் அடைந்திருப்பதை கண்டு வேதனை அடைவார்கள். அந்த அளவிற்கு காட்டுப் பன்றிகள் பயிர்களை சேதப்படுத்தியிருக்கும்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், கடந்த சில நாட்களாக காட்டுப் பன்றிகள் தொல்லை அதிகமாக உள்ளது. இரவில் வரும் காட்டுப்பன்றிகள் அனைத்து வகையான விவசாய பயிர்களையும் நாசம் செய்கின்றன.

இதற்காக இரவு முழுவதும் விவசாய நிலத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகிறோம். இரவில் கூட்டம், கூட்டமாக வரும் பன்றிகளை வெடி, வெடித்து விரட்டு கிறோம். மேலும் விவசாய பயிர்களுக்குள் காட்டுப் பன்றிகள் நுழைந்து விடக் கூடாது என்பதற்காக தீப்பந்தம் ஏந்தி விளை நிலங்களை சுற்றி வருகிறோம். தீப்பந்தம் மற்றும் மனிதர்களை பார்த்தவுடன் காட்டுப்பன்றி கள் ஓடிவிடும்.

**<u>பன்றிகள் பிடிக்கப்படுமா?</u>**

எனவே விளை நிலங்களில் வெள்ளை நிற சாக்குகளை கட்டி வைத்துள்ளோம். அதை பார்க்கும் காட்டுப்பன்றிகள் மனிதர்கள் இருப்பதாக நினைத்து ஓடிவிடும். எனவே இரவு நேரங்களில் கூட்டம், கூட்டமாக சுற்றித்திரிந்து விவசாய பயிர்களை நாசம் செய்யும் காட்டுப்பன்றிகளை வனத்துறையினர் பிடித்து, விளை நிலங்கள் இல்லாத காட்டு பகுதிகளில் விட வேண்டும் என்றார். விவசாயிகளின் கோரிக்கை களை நிறைவேற்ற உயர் அதி காரிகள் நடவடிக்கை எடுப் பார்களா?

## ஆக்கிரமிக்கப்பட்ட வயலில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் அழிப்பு போலீஸ் குவிப்பு



திருவெறும்பூர் அருகே ஆக்கிரமிக்கப்பட்ட வயலில் நடவு செய்யப்பட்ட நெற்பயிர்கள் அழிக்கப்பட்டன. இதனால் அங்கு அசம்பாவிதம் ஏதும் ஏற்படாமல் இருக்க போலீசார் குவிக்கப்பட்டனர்.

**ஆக்கிரமிப்பு**

திருவெறும்பூரை அடுத்துள்ளது கோட்டரப்பட்டி கிராமத்தின் அருகில் 120 ஏக்கர் பரப்பளவு உள்ள கோட்டரான் குளம் உள்ளது. உய்யகொண்டான் வாய்க்கால் மூலம் வரும் நீரை இந்த குளத்தின் சேமித்து கோட்டரப்பட்டி, செட்டியார்பேட்டை, முடுக்குப்பட்டி, பத்தாளப்பேட்டை, கூத்தைப்பார், விளாங்குளம் ஆகிய கிராம விவசாயிகள் விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்தனர்.

இந்த குளத்தின் ஒரு பகுதியை சுமார் 25 ஏக்கர் வரை ஒரு சிலர் ஆக்கிரமித்து விவசாயம் செய்து வந்ததால் மற்ற விளைநிலங்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல வருடங்களாக இந்த நிலை உள்ளதால் பாசன விவசாயிகளும், ஆக்கிரமிப்பு பகுதியில் நடவு செய்தவர்களும் நீதிமன்றத்தில் முறையீடு செய்துள்ளனர்.

**நெற்பயிர்கள் அழிப்பு**

இந்நிலையில் கோட்டரப்பட்டி பாசன கமிட்டி தலைவர் ஆனந்தராஜ், கலெக்டரிடம் ஒரு மனு கொடுத்தார். அதில் விவசாயிகள் பயன்படுத்தும் குளம், ஏரி போன்றவற்றில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி விளைநிலங்கள் பாதிக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற உச்சநீதிமன்ற உத்தரவு இருந்தும் அதனை மீறி கோட்டரப்பட்டியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான

சுமார் 10 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து தற்போது நெல் நடவு செய்துள்ளனர். இதனால் தண்ணீர் தட்டுபாடு ஏற்படுகிறது. எனவே ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்றிட உத்தரவிட வேண்டும் என மனுவில் கூறி இருந்தார்.

இதனை தொடர்ந்து கலெக்டர் ஜெயஸ்ரீ முரளீதரன் ஆக்கிரமிப்பு நிலங்களை அகற்றிட பொதுபணித்துறைக்கு உத்தரவிட்டார்.இந்நிலையில் நேற்று காலை முதல் மாலை வரை கோட்டரப்பட்டியில் ஆக்கிரமிப்பு பகுதிகளில் நடப்பட்டிருந்த நெல்பயிர்களை பொதுபணித்துறை அதிகாரிகள் முன்னிலையில் டிராக்டர் மூலம் அழித்தனர். சம்பவ இடத்திற்கு வட்டாட்சியர் மஞ்சுளா மற்றும் வருவாய்துறை அதிகாரிகள் வந்திருந்தனர்.

<u>**போலீசார் குவிப்பு**</u>

நெல்பயிர்களை அழிப்பதால் அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் தடுப்பதற்காக இன்ஸ்பெக்டர்கள் பாஸ்கர், ராஜேசுஷ், ரமேசுஷ்குமார் ஆகியோர் தலைமையில் ஏராளமான போலிசார் குவிக்கப்பட்டிருந்தனர். நடவு செய்யப்பட்ட நெற்பயிற்கள் அழிக்கப்பட்டதால் விவசாயிகளிடையே பரபரப்பு ஏற்பட்டது.

## பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.35½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை



அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில்ரூ.35½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

<u>தேங்காய்</u>

அம்மாபேட்டை அருகே உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு 7 ஆயிரத்து

239 தேங்காய்கள் கொண்டுவரப்பட்டு இருந்தன. இதில் சிறிய தேங்காய் 6 ரூபாய் 70 காசுக்கும், பெரிய தேங்காய் 16 ரூபாய் 40 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் 50 ஆயிரத்து 183 ரூபாய்க்கு விற்பனையானது.

கொப்பரை தேங்காய் 70 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 6 ஆயிரத்து 319 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 7 ஆயிரத்து 529 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 1 லட்சத்து ஆயிரத்து 329 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>நெல்–நிலக்கடலை</u>

நெல் 65 மூட்டை கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் பொன்னி ரகம் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,723–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.2,038–க்கும் ஏலம் போனது.

ஏ.டி.டி 39 ரகம் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக ரூ.1,523–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,569–க்கும் ஏலம் போனது.

மொத்தம் 76 ஆயிரத்து 520 ரூபாய்க்கு விற்பனையானது.

நிலக்கடலை 1,500 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் காய்ந்த நிலக்கடலை குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 3 ஆயிரத்து 700 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 200 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 22 லட்சத்து 80 ஆயிரத்துக்கு விற்பனையானது.


<u>மக்காச்சோளம்</u>

மக்காச்சோளம் 74 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 813 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,191–க்கும் ஏலம் போனது. மொத்தம் 23 ஆயிரத்து 825 ரூபாய்க்கு விற்பனையானது.

வெள்ளை எள் 126 மூட்டைகள் கொண்டுவரப்பட்டு இருந்தது. இதில் குவிண்டால் குறைந்தபட்ச விலையாக 13 ஆயிரத்து 416 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 15 ஆயிரத்து 219 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம் 10 லட்சத்து 26 ஆயிரத்து 814 ரூபாய்க்கு விற்பனையானது.

இந்த ஏலத்தில் விவசாய விளைபொருட்கள் மொத்தம் 35 லட்சத்து 58 ஆயிரத்து 665 ரூபாய்க்கு விற்பனையானது.

**லெஹர் புயல் இன்று பிற்பகல் மசூலிப்பட்டினம் அருகே கரையை கடக்கும் வானிலை மையம் அறிவிப்பு**



சென்னை

லெஹர் புயல் ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் அருகே இன்று பிற்பகல் கரையை கடக்கும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை பொய்த்துவிடுமோ?

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்துவிடுமோ என்று தமிழக மக்கள் பயந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் கடந்த வருடமும் வடகிழக்கு பருவமழை இயல்பானஅளவுக்கு பெய்யவில்லை. ஆனால் தென்மேற்கு பருவமழை இயல்பான அளவுக்கு பெய்து சற்று கை கொடுத்தது.

கார்த்திகைக்கு பின்னர் மழையும் இல்லை, கர்ணனுக்கு பின் கொடையும் இல்லை என்று வழக்கத்தில் சொல்வது உண்டு. இந்த வருடம் திருக்கார்த்திகை விழா

மாதத்தில் முதல் நாளே வந்துவிட்டது. அதனால் மழை கிடையாது என்ற அந்த வழக்கமொழி பொய்த்துவிட வாய்ப்பு உள்ளது.

இந்த வடகிழக்கு பருவமழை காலம் முடிய ஒரு மாதம் இருக்கிறது. எனவே இனிமேலாவது மழை பெய்தால் நல்லது என்று விவசாயிகள் நினைக்கிறார்கள்.

<u>லெஹர் புயல் இன்று கரையை கடக்கும்</u>

இந்த நிலையில் அந்தமான் அருகே கரையை கடந்த லெஹர்புயல் மீண்டும் வலுப்பெற்று மிகத்தீவிரம் அடைந்துள்ளது. இந்த புயல் மசூலிப்பட்டினத்தில் இருந்து கிழக்கு தென்கிழக்கில் 570 கிலோமீட்டர் தூரத்திலும், காக்கிநாடாவில் இருந்து தென்கிழக்கு திசையில் 510 கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ளது. அது மேற்கு வடமேற்காக நகர்ந்து கொண்டிருக்கிறது. அந்த புயல் இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் மசூலிப்பட்டினம் அருகே கரையை கடக்கும்.

அப்போது கடலோர ஆந்திர பகுதிகளில் அநேக இடங்களில் மழை பெய்யும். சில இடங்களில் மிக கன மழை பெய்யும். தெலுங்கானா பகுதிகளில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யும்.

<u>காற்று மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும்.</u>

ஆனால் தமிழ்நாட்டுக்கு இந்த புயலால் எந்த தாக்கமும் இல்லை. இலங்கை அருகே புயல் உருவானால் அல்லது நிலை கொண்டிருந்தால் தமிழ்நாட்டில் அதிக மழை பெய்யும். வடகிழக்கு பருவமழை காலம் டிசம்பர் மாதம் முடிய உள்ளது. சில வருடங்களில் ஜனவரி 5–ந்தேதி வரை வடகிழக்கு பருவமழை நீடித்து இருக்கிறது.

<u>சில இடங்களில் மழை பெய்யும்</u>

இன்று (வியாழக்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்யும். இவ்வாறு சென்னை வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகளுக்கு ரூ.1½ கோடியில் நலத்திட்ட உதவிகள் பெரம்பலூர் கலெக்டர் தகவல்**



பெரம்பலூர் மாவட் டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளுக்கு ரூ.1□ கோடி மதிப்பி லான நலத்திட்ட உதவி கள் வழங்கப்பட்டுள் ளது என்று மாவட்ட கலெக்டர் தரேஸ்அஹமது தெரிவித் தார்.

## நலத்திட்ட உதவிகள்

தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் 17 விவசாயிகளுக்கு ரூ.19லட்சத்து 666 மதிப்பிலான வேளாண் கருவிகளை மாவட்ட கலெக் டர் அலுவலகத்தில் கலெக்டர் தரேஸ் அஹமது வழங்கினார். பின்னர் அவர் கூறியதா வது:- தமிழக முதலமைச்சர் விவசாயிகளின் நலன் கருதி பல்வேறு வகையான நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் குறைந்த வாடகைக்கு வேளாண் கருவிகளை வழங்கு தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், மானிய விலையில் கருவிகள் மற்றும் எந்திரங் களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப் பாக செயல் படுத்தப் படுகிறது.

## 350 பேருக்கு

நமது பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம்2011-2012ம் ஆண்டில் 130 விவசாயிகளுக்கு 50 லட்சத்து 67 ஆயிரம் மதிப் பிலான நலத் திட்ட உதவி களும், 2012-2013ம் ஆண் டில் 220 விவசாயிகளுக்கு ரூ.1 கோடியே 7லட்சம் மதிப் பிலான நலத்திட்ட உதவிகளும் ஆக மொத்தம் இதுவரை 350 விவசாயிகளுக்கு ரூ.1கோடியே 50லட்சத்து 74ஆயிரம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டுள்ளது.

அந்த வகையில் தற்போது 5 நபர்களுக்கு ரூ.7லட்சத்து 14 ஆயிரம் மதிப்பிலான பவர் டிரில்லர்களை ரூ.2லட்சத்து 25 ஆயிரம் அரசு மானிய உதவியுடனும், 2 நபர்களுக்கு ரூ.3 ஆயிரத்து 865 மதிப்பிலான கைதெளிப்பான்களை ரூ.1,932 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன், 4 நபர்களுக்கு ரூ.49 ஆயிரத்து 801 மதிப் பிலான விசைத் தெளிப் பான்களை ரூ.28 ஆயிரத்து 772 மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 2 நபர்களுக்கு ரூ.6லட்சத்து 92ஆயிரத்து 500 மதிப்பிலான வைக்கோல் கட்டும் கருவி களை ரூ.2லட்சத்து 25ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 1 நபருக்கு ரூ.3 லட்சத்து 19ஆயிரம் மதிப் பிலான பல்வகை கதிரடிக்கும் கருவியினை ரூ.1 லட்சத்து 50ஆயிரம் மதிப்பிலான அரசு மானிய உதவியுடனும், 3 நபர்களுக்கு ரூ.1 லட்சத்து 21ஆயிரத்து 500 மதிப்பிலான விசை களையெடுப்பான்களை ரூ.60ஆயிரத்து 750 மதிப் பிலான அரசு மானிய உதவி யுடனும் ஆக மொத்தம் 17 விவசாயிகளுக்கு ரூ.19 லட்சத்து 666 மதிப்பிலான வேளாண் கருவிகள் மற்றும் எந்திரங்களை ரூ.6லட்சத்து 96ஆயிரத்து 404 மதிப்பிலான அரசு மானிய உதவியுடன், நலத்திட்ட உதவிகள் வழங்கப் படுகிறது. விவசாய பெருமக்கள் இத்திட்டங்களை பயன்படுத்தி விவசாயத்தை பெருக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண் மை இணை இயக்குநர் (பொறுப்பு) இரா.கனகசபை, வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந் திரன், உதவி பொறியாளர் சிவக்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.